

# செந்தமிழ்


| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு ககூகூஅ-மாசி. | பகுதி |
| --- | --- | --- |
| கூஉ | *1967*—மார்ச். | ரு |


## பாண்டித்துரைத் தேவரவர்கள்

—●—


M. ராஜாஜயர் M.A.L T., M.L.C.

தலைமை ஆசிரியர், அரசர் உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.


கல்வ்வளம் முதலான பலவளமும் நிறைந்த நமது தமிழ் நாடு, தொன்றுதொட்டுப் பெருங்கலைப் புரவலரும் அருங்கலை விநோதருமான வள்ளல்கள் பலர் வாழ்தற்கு இடமாகியது. முடியுடை மூவேந்தரும் குறுநில மன்னரும் பிறரும் தம்பெருங்கொடையால் நம் தமிழ்மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் போற்றிப் புரந்துவந்தனர் என்பர். அத்தகையோர் வரிசையில், இந்நாட்டின் பழங்குடியினர் ஆகிய சேதுபதிகளின் மரபினர் சிறந்த இடம் பெற்றுத் திகழ்பவர் என்பது பலரும் அறிந்ததே. அவர்கள் செய்

துள்ள அறப்பணிகள் அளவில்லாதனவாகும். ஆண்டுதோறும் வரும் தமது வருவாயில் பெரும் பகுதியை அறத்துறைகளில் செல விட்டவர்கள். தமக்குரிய ஊர்களில் பாதியளவிற்குமேலானவற்றை அறவளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் அளித்துள்ளனர் என்பர். அவர்களின் அபிமானமும் ஆதரவும் பெற்ற தென்றமிழ்ப்புலவர்க ளும் வடமொழிவல்லுநரும் மிகப்பலராவர். தாமும்தமிழறிஞராய்த் திகழ்ந்தவர்கள். அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகளும் வெளிவந்த தமிழ் நூல்களும் பலவாம் என்பர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே செந்தமிழ்நாடு செய்த தவப்பயனாக, இச்சேதுவேந்தர் குலத்தில் சீரியோர் நால்வர் தோன்றினர். அவர்கள் முத்துராமலிங்க சேதுபதி என்னும் துரை ராஜா அவர்களும், அவர் தமையனார் ஆன பொன்னுச்சாமித் தேவர் அவர்களும், அச்சேதுபதி அவர்களின் செய்தவப்புதல்வ ரான பாஸ்கர சேதுபதிமன்னரவர்களும், மேற்குறித்த பொன்னுச் சாமித் தேவர் அவர்களுக்குப் புண்ணிய குமாரராக உதித்த உக் கிர பாண்டியன் என்னும் பாண்டித்துரைசாமித் தேவரவர்களுமா வர். இவர்கள் வாழ்ந்த காலம் இராமநாதபுரத்தின் பொற்காலம் என்னலாம். கலைமணமும் கவிமணமும்கமழ்ந்த காலம். வடமொழி யும் தென் மொழியும் வளர்ந்த காலம். பலகலை பயிலும் மாணாக் கர்களும், பயில்விக்கும் ஆசிரியர்களும். பிற வித்வான்களுமான பலர் இந்நகரில் இருந்த காலம் பழுத்த மரத்தை நாடிச்செல்லும் பறவைகள்போல் நாடெங்கும் உள்ள பாவலர்களும் நாவலர்க ளும் ஆகிய பலதிறப்பண்டிதர்கள் நாடோறும்வந்து இப்புரவலர்க ளால்சிறப்புச்செய்யப்பெற்றுச்சென்றகாலம். இவர்கள்சிறப்புக்களை ராவ்சாகிப் வித்வான் மு. ராகவையங்கார் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள "செந்தமிழ் வளர்த்த தேவர்கள்" என்னும் சிறந்த புத்தகத்தில் காணலாம். இவர்களுள்ளும் பொன்னுச் சாமித்தேவர் அவர்களைப் பற்றியும் பாண்டித்துரைத் தேவர் அவர் களைப்பற்றியும் அவர்கள் அப்புத்தகத்தில் விரிவாக எழுதியுள் ளார்கள்.

இந்நால்வரில் பாஸ்கர சேதுபதி மன்னரவர்களும் பாண்டித்துரைசாமித் தேவரவர்களும் சமகாலத்தவராய்வாழ்ந்து, பெருவள்ளன்மையோடு இந்நகருக்கணியாய்த் திகழ்ந்தவர். முன்னவரிருவரும் அவ்வாறே இந்நகரை அலங்கரித்தவர். இவர்களுள் பாஸ்கரரது ஒளி நாடெங்கும் பரவியது என்பது பலரும் அறிவர். அவரது புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது. அவர் பொருள்களை அளவிறந்து வாரி வழங்கிய பெருவள்ளலார். அவரது உதவி பெற்ற அறநிலையங்கள் நம் தமிழ்நாட்டில் பலவுள்ளன. மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குப் பேராதரவு தந்ததோடு தமதவையிற் பெரும் புலவராய்த் திகழ்ந்தவரும் பாவன்மையும் நாவன்மையும் ஆராய்ச்சித்திறமையும் பிறவும் ஒருங்கமைந்து எங்கும் ஒளிபரப்பியவருமாகிய மகாவித்வான் ரா. ராகவையங்கார் அவர்களையும் அதற்களித்து உதவியவர். புதுக்கோட்டை மன்னர் போன்றவர்களையும் அதற்குதவத் தூண்டியவர். புலவரைப்போற்றிய புரவலர். தமிழிடத்தும் தமிழ்ப்புலவரிடத்தும் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவர்.ஒருசமயம் மேற்குறித்த மகாவித்வான் ரா.ராகவையங்கார் அவர்களைப் பல்லக்கில் அமர்வித்துத் தாமே அதனைச் சுமந்துசென்ருர் என்பர். இது ஒன்றே அதற்குப் போதுமான சான்ருகுமன்ரே? இன்னும் இவர் பெருமையெல்லாம் எழுதுவதற்கு இடம் இதுவன்று. யான் அதிகம் அறிந்தவனும் அல்லேன். நிற்க, ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்களைப் பற்றி முதியோரிடமிருந்து யானறிந்த சிலவற்றை, அத்தேவரவர்கள் ஶூற்ருண்டு விழாக் கமிட்டியார் கேட்டுக்கொண்டதற்கிசைந்து இங்கெழுதுகின்றேன்.

சாமியவாள் என்று சிறப்பாகச் சொல்லப்பெற்ற நம் தேவரவர்கள் சிவநெறிச் செல்வர். தினந்தோறும் காலையில் நீராடிச் சிவபூசையை சிறப்புறச் செய்துமுடித்த பின்பே பிற காரியங்களைக் கவனிப்பாராம். இவர் மதுரை மாநகரில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளிடத்து மிகுந்த பக்தியுடையவர். அந்நகருக்கு இவர் அடிக்கடி சென்று அங்குத் தங்குவது வழக்கம். அவ்வாறு செல்லுங்கால் அந்நகரின் எல்லையை

அடைந்தவுடன் வண்டியைவிட்டிறங்கி அக்கடவுளின் ஆலய மிருக்கும் திக்குநோக்கித் தொழுவாராம். இராமநாதபுரத்தில் தமக்கெனத் தாம் புதிதாகக் கட்டிய பெரியமாளிகைக்குச் "சோம சுந்தர விலாசம்" என்னும் பெயரை இட்டுள்ளனர். அப்பெயரை இன்னும் அம்மாளிகையின் முகப்பில் காணலாம். இவர் சைவ சமயச்சார்பான நூல்களில் நல்ல பயிற்சி உடையவர். அக்காலத்து நிகழ்ந்த சைவசமய மாநாட்டில் தலைமை தாங்கிப்பேருரைவழங்கி யாவரையும் களிக்கச்செய்தனர் என்பர். இவர் ஆங்கிலம் நன்கு கற்றவர். தமிழ்க்கல்வியும் சிறப்பாகப் பெற்றவர். பற்பல தமிழ் நூல்களை அவ்வவற்றில் வல்லார் பலரிடத்துப் பாடம் கேட்டறிந்த வர். தாமே திருக்குறள் போன்ற நூல்களைப் பிறர்க்குப் பாடம் சொல்வராம். சொற்பொழிவாற்றுந் திறமை உடையவர். இவர் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் கேட்போர் உள்ளங் கவரும் தன்மை உடையன என்பர். அக்காவியத்திலுள்ள செய்யுட்களில் இவர் கூறும் நயங்கள் வியக்கத்தக்கனவாய் இருக்குமாம். இவர் ஒருநாளில் பெரும்பொழுது பல புலவர்கள் சூழலிலேயே கழிப்பர். இவரது சிவபூசை முடிந்தவுடனேயே அப்புலவர்கள் இவரைச் சூழ்ந்துகொள்வர் என்பர். இவரவையில் பேராசிரியர் திரு நாரா யணையங்கார் உள்ளிட்ட நிலையான புலவர் குழாம் ஒன்றிருந் தது. அப்புலவர்களுள் சிறந்தார் சிலரைப்பற்றிச் "செந்தமிழ் வளர்த்த தேவர்கள்" என்னும் புத்தகத்துட் காணலாம். தேவரவர் வேறிடங்களில் நிகழும் அவைகளில் தலைமை தாங்குதற்கோ சொற்பொழிவாற்றுதற்கோ செல்லும் பொழுதெல்லால் இப்புலவர் குழாமும் உடன் செல்லுமாம். இதுவன்றியும் நாடோறும் பல திசைகளிலுமிருந்து இவ்வள்ளலை நாடிவரும் பல புலவர்களும் இவரதவையை அலங்கரித்தனர் என்பர். இவ்வவை நிகழ்ச்சிகள் பற்றி மேற் குறித்த "செந்தமிழ் வளர்த்த தேவர்கள்" என்னும் புத்தகத்தில் விரிவாகக் கண்டுகொள்க. ஒருவர்க்கொருவர் உரை யாடும்பொழுது திருக்குறள் போன்றவற்றால் உரையாடுவதும் உண்டென்பர். நம்தேவரவர்கள் கவியியற்றும் வன்மையும் வாய்ந் தவர். இவரால் பல நூல்களும் வெளிவந்துள்ளன. இசையிலும், நாடகத்திலும் மிக்க ஆர்வமுடையவர் இவர். இசையுலகெங்கும்

தம்புகழ் பரவத் திகழ்ந்த பூச்சி ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள் இவ ரோடு ஒருசாலையில் கல்வி பயின்றவர். இவரது சிறந்த நட்பைப் பெற்றவர். அன்னார் இசைப்பயிற்சி பெற்று மேம்படுவதற்கு உறு துணைபுரிந்தவர் இத் தேவரவர்களே. இவ்வள்ளல் சிவபூசை செய் யுங்கால் அப்பூச்சியையங்கார் உள்ளிட்ட இசைவல்லுநர் தேவா ரப்பாசுரங்கள் முதலியவற்றை இன்னிசையோடு பாடுவர் என்பது முன்னர்க்குறித்த புத்தகத்தாலறியப்படும். மற்றும் அக்காலத்தில் வாழ்ந்த பிரபலமான சங்கீத வித்வான்கள் பலர் இங்கு வந்து இத் தேவரவர்களின் ஆதரவைப் பெற்றுள்ளனர்.

இவர்தம் பரிசனங்களோடு சிறந்த நாடகங்களுக்குச் சென்று காண்பது வழக்கமாம். அக்காலத்து உயர்ந்த நாடகக் கலை வல்லுநர்கள் பலர் இந்நகருக்கு வந்து நம்தேவரவர்களின் ஆதரிப்பைப் பெற்றுள்ளனர் என்பர். மேல்நாட்டு நாகரிக விளை யாட்டுக்களான டென்னிஸ், பில்லியர்ட்ஸ் போன்ற வற்றிலும் பயிற்சியுடையவர் என்பர். ஈரநெஞ்சமும் ஈகைப்பண்பும் மிக்கவ ராதலால் நம் தேவரவர்கள் தம்மை அடுத்த புலவர்க்கும் பிறர்க் கும் பொருளும் மனைகளும் பிறவும் அளித்துள்ளனர். வறியராய் வந்தவர்க்கு வேண்டும்பொருளை வழங்கியவர் உபநயனம், விவா கம் போன்றவற்றிற்குப் பொருள் வேண்டி அடைந்தார்க்கு இவர் செய்த உதவி பலவாகுமென்பர். மற்றும் கல்விப் பயிற்சிக்கு உப காரமாகப் பலர்க்குப் பொருள் அளித்து உதவியவர் இவர். இத் துறையில் பலர் உயர்நிலை எய்துதற்கும் இவரே காரணராயுமுள் ளனர். அரசியலிலும் பங்கெடுத்துக்கொள்பவர் நம் தேவர். 1901-ஆம் ஆண்டு மதுரைமாநகரில் கூடிய சென்னைமாகாண அர சியல் மகாநாட்டின் உபசரணைக்கமிட்டித் தலைவராயிருந்து பணி யாற்றியதோடு சிறந்ததோர் சொற்பொழிவும் ஆற்றினர் என்பர். நாட்டுப்பற்றும் மிக்குடையவர் நம் தேவரவர்கள். சிறந்த நாட்டுத் தொண்டரும் கப்பலோட்டிய தமிழருமான வ. உ. சிதம்பரனார் நம்தேவரது நட்புரிமையைப் பெற்றவர். அன்னார் ஆங்கிலக் கம்பெனிக்கு எதிராகத் தூத்துக்குடியில் சுதேசக் கப்பற் கம்பெ னியைத் தோற்றுவிப்பதற்கு நம் தேவரவர்கள் பேரூக்கமளித்துப்

பெரும் பொருளுதவியும் செய்தனரென்பர். தாம் நிறுவிய மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குரிய பெரியதோர் மூலதனத்தையும் அக் கம்பெனியில் முதலீடுசெய்தனர் என்றுங் கூறுவர்.

தோட்டக்கலையிலும் சிறந்தஆர்வமுடையவர்இவர். இராமநாதபுரத்தில் திகழும் மூலைக்கொத்தளம் பங்களாவும் அதனோடு கூடிய பரந்த தோப்பும் இவருக்குரியவை. இவர்காலத்தில் உயர்ந்த பல மாமரங்களும் பிறவும் இவர் பரிபாலனத்தில் இங்குச் சிறந்து விளங்கின. இத்தோப்பினிடையே அழகான சிறுதாமரைக் குளம் ஒன்றுண்டு. இவர் நாடோறும் இங்குவந்து ஆர்வத்தோடு இவற்றையெல்லாம் நேராகவே நன்கு கவனிப்பது வழக்கம். இதன் ஒரு மூலையில் உள்ள பங்களாவில் தங்கி உல்லாசமாகப் பொழுதுபோக்குவதும் இவர் வழக்கம். தமக்குரிய கிராமங்களிலும் பயன் தரும் மரங்களைவைத்து வளர்க்கச்செய்துள்ளனர். இது பற்றிய நாட்டுப்பாடலும் உண்டு.

தமிழ்நிலைபெற்ற மதுரையம்பதியில் நான்காஞ்சங்கமென்னுந்தமிழ்ச் சங்கத்தை நிறுவிப் பலதுறையில் தமிழ்ப்பணியாற்றுமாறுசெய்த தமிழ் வள்ளல் இவரென்பது நம்நாடு முழுவதும் நன்கறிந்ததொன்று. தம்மாளிகையையே அதற்கிடமாக்கியவர்இவர். அதுபற்றி யான் விரித்துரைத்தல்வேண்டா. இவ்விராமநாதபுரத்தில் சேதுபதி மன்னர் அவர்களுடைய பேராதரவால் சிறந்து விளங்கும் ராஜா உயர்நிலைப்பள்ளி என்ற பெயரை உடைய எமது உயர்தரக்கலாசாலை ஆதியில் அச்சேதுபதி மரபினருள் ஒருவராகிய ஜெயபால்சாமித் தேவர் அவர்களால் தொடங்கப்பெற்று ''ஜெயபால் எலிமெண்டரி ஸ்கூல்'' என்னும் பெயருடன் திகழ்ந்தது. அவர்க்குப் பிறகு, ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித்தேவர் அவர்கள் பரிபாலனத்துள் பல்லாண்டுகள் அமைந்து, பல உதவிகள்பெற்றுப், ''பாண்டியன் செகண்டரி ஸ்கூல்'' என்னும் பெயருடன் விளங்கிற்று. இதனால் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கும் ஆதரவுதந்தவர் நம்தேவர் அவர்கள் என்பது விளங்கும். இத்தொடர்பு பற்றி அவர் அபிமானத்தைப்பெற்ற ராவ்சாகிப் ஸ்ரீமான்

மு. ராகவையங்காரவர்கள் தாம் எழுதி வெளியிட்ட ''செந்தமிழ் வெளர்த்த தேவர்கள்'' என்னும் புத்தகத்தால் தமக்குக் கிடைத் ஊதியத்தொகை ரூபாய் இரண்டாயிரத்தையும் இப்பள்ளியில்நல்ல தேர்ச்சிபெறும் மாணவருக்கு உபகாரமாக வழங்கும்படி ஒரு நன்கொடை நிதியாக அளித்துள்ளது பாராட்டத்தக்கது.

பண்டைக்காலத்துப் புலவர்களை மதித்துப் போற்றிய புரவலர்களோடு ஒப்பவைத்து எண்ணத்தக்கவர் இத்தேவரவர்கள். இதனை விளக்கத்தக்கதோர் எடுத்துக்காட்டினை இங்குக் காண்போம். சங்க காலத்தில் வாழ்ந்த மோசிகீரனுர் என்னும்தமிழ்ப்புலவர் பெருஞ்சேரலிரும்பொறை என்னும் அரசனைக் காணச்சென்றனர். அவர் அம்மன்னனது அரண்மனையை அடைந்தபோது அவனது வெற்றி முரசு நீராட்டற்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. அதனுடன் அம் மன்னனுஞ் சென்றிருந்தான். அம்முரசு வைக்கப்படும் கட்டிலின்மேல் புலவர் அறியாது வழிநடந்துவந்த களைப்பால் படுத்து அயர்ந்து உறங்கிவிட்டனர். முரசு கட்டில் தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் என்பர். நீராட்டு விழா முடிந்தவுடன் அம்முரசு மீண்டும் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டது. உடன் வந்த அரசன் ''புனிதத் தன்மை வாய்ந்த முரசு கட்டிலின் மேல் யாரோ உறங்குகின்றனரே'' என்று சினம் பொங்கப்பெற்று வாளை உருவிக்கொண்டு அவரைவெட்டுதற்காக அருகில்வந்தான். புலவர் முகத்தைப் பார்த்தவுடன் அவன் சினம் பறந்தோடியது. வாள் கையை விட்டு நழுவியது. அவன் அருகில் இருந்த சாமரையை எடுத்துப் புலவர்க்கு வீசினன். புலவர் விழித்தெழுந்து திடுக்கிட்டு அம்மன்மன்னனை வியந்து போற்றினர் என்பர். இவ்வரலாற்றினைப் பண்டிதர்கள் கூறக்கேட்கலாம். இத்தகையதோர் நிகழ்ச்சி நம் தேவரவர்கள் வரலாற்றிலும் உள்ளது. ஸ்ரீமத் திரு. நாராயணையங்கார் என்பவர் இவரது அவைப் புலவர்களுள்ளே முதன்மை பெற்று விளங்கியவர். இப்பெரும் புலவர் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லுநர். இலக்கணம், தருக்கம், வேதாந்தம், சோதிடம் முதலானவற்றில் சிறந்தஞானமுடையவர். ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் பல எழுதி வெளியிட்

டவர். பல்லாண்டுகள் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் 'செந்தமிழ்'ப் பத்திராதிபராகவும் கலாசாலைத் தலைமை ஆசிரியராகவும் விளங்கியவர். தேவரவர்கள் அந்தரங்க நட்பைப்பெற்றவர். இவர்களிடத்துத் தேவரவர்கள் பேரபிமானமும் பெருமதிப்பும் வைத்திருந்தனர். ஒரு சமயம் ஐயங்காரவர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவ நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பெற்றபோது தேவரவர்களும் சென்று வேண்டியவற்றைத் தாமே கவனித்தனராம். மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவத் தேவரவர்கள் சிலரோடிருந்தெண்ணிய போது, அவர்கள் ஐயங்காரவர்களை அழைக்கக் கருதி வேத்திரத் தாசான் எனப் பிரப்பங்கோலேந்தித் திருக்கயிலாயத்துத்தலைமை தாங்கிநிற்கும் நந்திதேவனைப்போலத் தமதவையில் தலைவராய் உள்ளவர் என்றும் பிரம்பினாலாகிய ஆசனத்தமர்ந்து தலைமைவகிப்பவர் என்றும் இரு பொருள்பட ''அவ்வேத்திரத்தாசானை அழைத்துவா'' என்று பணித்து ஒருவரை அனுப்பினராம். வேத்திரம் என்பது பிரம்பு. மற்றும் ஒரு சமயம் ''இத்தமிழ்ச் சங்கம் இனிது நடைபெறுவதில் உம்பொறுப்பை நம்பி இருக்கிறேன்'' என்று ஐயங்காரவர்களைப் பார்த்துத் தேவரவர்கள் மொழிந்தனர் என்பர். அக்காரணத்தினாலேயே ஐயங்காரவர்கள் வேறுபிற பதவிகளை எல்லாம் விரும்பாது தள்ளி, அச்சங்கம் தோன்றிய காலம்முதல் சுமார் 45 ஆண்டுகளுக்குமேல் தமது மிக்க முதுமைப் பருவத்திலும் விடாது அதற்குத் தொண்டு செய்து தம்கடன் ஆற்றினர் என்பர். சிலகாலம் பல காரணங்களினால் தாம் ஒருவரே செந்தமிழ்க் கலாசாலைப் பேராசிரியராகவும் 'செந்தமிழ்'ப் பத்திராதிபராகவும் சங்க மானேஜராகவும் நூற்பதிப்பு முதலான பிறபல துறைகளின் நிர்வாகியாகவும் பணியாற்றும்படி நேர்ந்ததாம். தேவரவர்கள் சிவபதமடைந்தவுடன் இச்சங்க சம்பந்தமாக ஒரு குழப்ப நிலை ஏற்பட்டிருந்ததென்றும், அப்போது தம் பொறுப்பில் சங்கத்தைஏற்று அதன் காரியதரிசியாகிய ஸ்ரீமான் டி. சி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களோடு ஒத்துழைத்து நடத்திவந்தனர் என்றுங் கூறுவர். இப்பேராசிரியரான ஐயங்காரவர்கள் ஒருசமயம் தேவரவர்களைக்காண அவரதுமாளிகைக்கு வந்தனர். தேவரவர்கள் அப்போது வெளியே சென்றிருந்தனர். ஐயங்காரவர்கள் அங்

கிருந்த வொரு சோபாவில் அமர்ந்தனர். அமர்ந்தவர் அயர்ச்சி யால் உறங்கிவிட்டனர். வெயில் கடுமையாக இருந்தது. இந்நிலை யில் தேவரவர்கள் வந்துவிட்டனர். வேலைக்காரன் ஐயங்காரவர் களைத் துயிலெழுப்பச் சென்றனன். தேவரவர்கள் தம் கையால் அவனை விலக்கிவிட்டுத் தாமே அங்கிருந்த ஸ்டூலை எடுத்து ஸோபாவின் அருகில் மெதுவாக இட்டுக்கொண்டு அமர்ந்து அரு கிருந்ததொரு விசிறியை எடுத்து ஐயங்காருக்கு வீசிக்கொண்டி ருந்தனர். ஐயங்காரவர்கள் மெல்லென்ற காற்று முகத்தில் பட்டவு டன் விழித்துக்கொண்டு தேவரவர்களது செயலைக்கண்டு திடுக் கிட்டெழுந்தனர். தேவரவர்கள், அவரிருகரத்தையும் பற்றி அந் தச்சோபாவிலேயே அமர்வித்துத் தாம் அந்த ஸ்டூலிலேயே இருந்து அவரோடு உரையாடிக்கொண்டிருந்தனர் என்பர். இவர் செயல் இரும்பொறை மன்னன் செயலோடு ஒத்ததன்றோ?

தேவரவர்கள் செவியிற் சுவையுணரும் செம்மலாய் விளங் கினர். அக்காலத்தில் ''பட்டப்பாசுவாமிகள்'' என்ற வைணவப் பெரியார் ஒருவரிருந்தார். அவர் வடமொழி, தென்மொழி, வேதாந்த நூல்களில் விற்பன்னர். நாலாயிரம் திவ்வியபிரபந்த வியாக்யானங்களை நன்கு பயின்று நயங்களில் திளைத்தவர். சொற் பொழிவாற்றுவதில்பேராற்றல் உடையவர். இத்துறையில்பலர்க்கு முன் மாதிரியாய் இலங்கியவர். மிகுந்த பிரசித்தி உடையவர். ஒரு சமயம் அவர் தேவரவர்களைக்காண வந்தனர். அப்போது தேவரவர்கள் செல்வ நிலையில் குறைபாடுடையராயிருந்தனர். பெருங்கொடையாளிகளை அடையும் இந்நிலை இவரையும் விட வில்லை. இதனை அறிந்து கொண்டார் சுவாமிகள் ஆயினும் பரிசில் விருப்பமின்றிச் செய்யுள் நயமுணர்ந்தீடுபடும் சீரியரைக்கண்டு சில சொல்லிப்போகவிழைந்தனர். தேவரவர்கள் சுவாமிகளை அன் போடு வரவேற்றனர். அவர்கள் சைவராதலால், சைவசமயா சாரியர்கள் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசக அடிகள் அருளிச்செய்த திருவாசகத்திலுள்ள ''கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்டபின்'' என்று தொடங்கும் பாடலை எடுத்துப் பொருள் விரிக்கத் தொடங்கினர் சுவாமிகள். ''கண்ணப்பனொப்ப தோர் அன்பின்மை'' என்றதற்குச் சாதாரணமாகத் தம்மிடத்தில்

கண்ணப்பன் அன்புக்கு ஒப்பான அன்பின்மை என்று பொருள் கூறுவர். சுவாமிகள் ''அங்ஙனங் கூறுதலால் கண்ணப்பரிடத்து மிக்க இறையன்பு உண்டென்றும் அவ்வளவிற்குறைந்த அன்பே தம்மிடத்தில் உள்ளதென்றும் பொருள்படுவதாகும். இது சிறந்த பொருளாகாது. இறையன்பு சிறிதேனும் தம்மிடமில்லை. அங்ஙனமாகவும் அவ்விறைவன் தம்மை ஆட்கொண்டான் என்று உரைப்பதே நயமான உரையாகும். ஆகவே, கண்ணப்பனுக்கு அன்பின் நிறைவு உள்ளது. தமக்கு அதற்கொப்ப அன்பின்மை உள்ளது. அதாவது கண்ணப்பனது இறையன்பு உச்சநிலையில் உள்ளது அதற்கொப்பத் தமதன்பின்மை உச்சநிலையில் உள்ளது. இவ்வகையில் இரண்டும் ஒக்கும் என்றதாம். எனவே தம்பால் அன்பின்மை பூரணமாக இல்லாத தன்மையை விளக்கியதாம்'' எனச் சுவாமிகள் பொருள் கூறினர். இதனைச் செவிமடுத்த தேவரவர்கள் வியப்புக் கடலுள் ஆழ்ந்து தம்மை மறந்தனர். அருகில் இருந்த திரு. நாராயணையங்கார் அவர்களிடம் ''எங்கிருந்தேனும் தக்கதோர் தொகை கடன்பெற்று வருக'' என வேண்டினர். ஐயங்காரவர்களும் அங்ஙனமே விரைவிற்செய்ய, தேவரவர்கள் அத்தொகையை சுவாமிகளுக்கு அன்போடளித்து, உபசார வார்த்தைகள் சொல்லி மரியாதையோடு அவர்களை அனுப்பினர் என்பர். ''சான்றோர் கடன் கொண்டும் செய்வார் கடன்'' என்னும் பழமொழிக்கு இதுதக்கதோர் சான்றன்றோ? தேவரவர்கள் புலமையைப் போற்றும் மாண்பும் இதனால் விளங்கும்.

முற்காலத்து வாழ்ந்த வள்ளல்கள் ஈகைப் பண்புடையராய் இருந்ததன்றியும், ஈரநெஞ்சமும்உடையராயிருந்தனர்.கடையெழு வள்ளல்களுள் ஒருவனாய்த்திகழ்ந்த வேள்பாரி ஒருசமயம் தரையில் படர்ந்து கொழு கொம்பின்றித் தவிக்கும் முல்லைக் கொடியைக் கண்டு அவ்வோரறிவுயிரிடத்தும் பேரிரக்கங் கொண்டு, தனது தேரையே அதுபடர்வதற்கு ஆதாரமாக நிறுத்தித் தான் சிவப்ப நடந்து சென்றனன் என்றும், அவ்வள்ளல்களில் ஒருவனாகிய வையாவிக் கோப்பெரும் பேகன், கார்காலத்தாடிய மயிலொன்றினைக்கண்டு, அது குளிரால் நடுங்குகின்றதென்று கொண்டு அத

னிடத்திரக்கத்தால். தான் போர்த்தியிருந்தஉயர்ந்தபோர்வையை எடுத்து அதன்மேல் போர்த்துச் சென்றனன் என்றுங் கூறுவர். பிற்காலத்து வள்ளலாகிய நம்தேவரவர்களும் இவர்களைப் போன்று உயிர்களிடத்து அருளுடையவராயிருந்த உத்தமராவர். ஒருநாள் தேவரவர்கள் தம்மாளிகையின் முகப்பில் நின்றுகொண்டிருந்தனர். அப்பொழுது சில குருவிக்காரர்கள் பறவைகளைப் பிடித்துக் கொண்டு வீதியில்செல்வதைக்கண்டனர். அவர்கள் அவற்றை விற்றுவரும் பொருளைக்கொண்டு பிழைப்பு நடத்த அவ்வாறு செய்கின்றனர் என்பதை அறிந்தனர். அவர்களை அழைத்து அவர்களிடம் அவை அனைத்திற்கும் உரிய விலையைக்கேட்டு, அவ்விலைப் பொருளை அவர்களுக்குக் கொடுத்து, அவற்றையெல்லாம் தாமே வாங்கிக்கொண்டு அவர்களை அனுப்பிவிட்டு, அவையனைத்தையும் பறந்துபோகவிட்டனர். அன்றுமுதல் பலநாள் அது வழக்கமாகி விட்டதாம். இச்செயலால் தேவரவர்கள் எவ்வுயிரிடத்தும் இரக்கமுடையராய் இருந்தனர் என்பதும், இவ்வகையாலும் பண்டைப் பெருவள்ளல்களை ஒத்தவர் என்பதும் நன்ருக விளங்கும்.

இச்செல்வர் எளிமைப் பண்பும் வாய்ந்தவராய் இருந்தனர். இவர் வறியவருக்கு இரங்குபவர் ஆதலால் தமது மாளிகையின் முகப்பில் ஒரு பெரிய கஞ்சித் தொட்டி அமைத்திருந்தனர். தினந்தோறும் முற்பகலில் ஏழைகளுக்குக் கஞ்சி வழங்க ஏற்பாடு செய்ததோடு தாமே அங்குவந்திருந்து அதனை ஆர்வத்துடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் கவனித்துக் களிப்படைவாராம். இவர் அவைப் புலவர்களுள் வித்துவான் அரங்கசாமிஐயங்கார் என்பவர் ஒருவர். இத்தமிழ்ப் புலவர் நம்தேவரவர்களோடு இளமை முதல் அவரிறுதிவரை நெருங்கி உடன் பழகியவர். அவரோடு கூடவேயிருந்து தமிழ் நூல்களைப் பயின்றவர். இளமை முதலே புறக்கண் ஒளி இல்லாதவராயினும் அகக் கண் ஒளி சிறக்கப்பெற்றவர். எதனையும் ஒருமுறை கேட்ட அளவிலேயே திரும்பச்சொல்லும் நினைவாற்றல் படைத்தவர். இதனை விளக்கத்தக்கதோர் நிகழ்ச்சி கூறப்படுவதுண்டு. ஒருநாள் ஒரு தமிழ்ப் புலவர் சில செய்யுட்களை இயற்றிக்கொண்டு தேவரவையை அடைந்தனர். அவர் ஐயங்காரவர்களைப் புறக்கண் ஒளி இல்லாதவரென அறிந்து பொருட்படுத்

தாதிருந்தனர். ஐயங்காரவர்கள் அமைதியாக இருந்தனர். தேவரவர்கள் அனுமதிப்படிப் புலவர்தம் செய்யுட்களை ஒரு முறை படித்தனர். உடனே ஐயங்கார் ''இவை பழம் பாடல்களாகும்; இயற்றியவர் பெயர் நினைவிலில்லை. அவற்றைத் தாம் செய்ததாக இப்புலவர் கொண்டுவந்துள்ளனர்'' என்றனர். தேவரவர்கள் ஐயங்காரை நோக்கி ''நீ அவற்றைச் சொல்வாயோ'' என வினவ, இவ்வையங்கார் அவை அனைத்தையும் ஒரு பிழையின்றித் திரும்பச்சொல்லிவிட்டனராம். வந்த புலவர் திகைத்துப் பின் ஐயங்காரது திறமையை அறிந்துகொண்டு அவரிடத்து மிக்க மரியாதையோடு நடந்துகொண்டனர். தேவரவர்களும் அப்புலவர்க்குத் தக்க சிறப்புச்செய்து அனுப்பினர் என்பர். நம் ஐயங்காரவர்களிடத்துத் தேவரவர்கள் சிறந்த அபிமானம்உடையவர். அவர்களிடத்து எளிமையுடன் பழகுவதேயன்றியும் அவர் குடும்பத்தாரிடத்தும் அவ்வாறு பழகுவராம். தமது மூலைக்கொத்தளம் தோப்புக்குப் போய்வருங்கால் வழியிலுள்ள அப்புலவர் இல்லத்திற்கு வந்து யாவரோடும் அங்ஙனம் பழகி உரையாடுவராம். இவ்வையங்காரது இல்லத்து நிகழ்ந்த திருமணம் முதலான வைபவங்களிலும் அவர் குடும்பத்தினரைப்போலவே கலந்துகொள்வராம். பிரபல சங்கீத வித்துவானன ஸ்ரீமான் பூச்சியையங்காரைப்பற்றிய சில குறிப்புக்கள் முன்னர்த்தரப்பட்டன. ஒரு நாள் இவ்விசைப்புலவர் இராமநாதபுரத்தில் கடைத்தெரு வழியாக வந்துகொண்டிருக்கும் பொழுது இடறிவிழுந்துவிட்டனர். கால் எலும்பு முறிந்துவிட்டதாம். தம்மாளிகை முகப்பில் நின்றுகொண்டிருந்த தேவரவர்கள் அதனைக்கண்டு, விரைந்துசென்று, அவருக்கு வேண்டுவனசெய்து தம் வண்டியில் அவரை மருத்துவச்சாலைக்கு ஏற்றிச் சென்று, தக்க சிகிச்சை செய்வித்தனராம். பேராசிரியர் திரு. நாராயணையங்கார் திறத்திலும் இவர் இங்ஙனம் செய்ததொன்று முன்னர்க்கூறப்பட்டுள்ளது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் பிரபல வழக்கறிஞராய் விளங்கிய திருவரங்கம் கோபாலசாமி ஐயங்கார் இவரது அன்பையும் ஆதரவையும் பெற்றவருள் ஒருவர். அவ்வழக்கறிஞருக்கு இராமநாதபுரத்தில் ஒரு மாளிகையுண்டு. அம்மாளிகையின் கிருகப்பிரவேச விழாவில் நம் தேவரவர்களும் கலந்து

கொண்டு, பட்டாபிஷேக ராமபிரான் படத்தின் திருமுன்பு ராம. பட்டாபிஷேகம் பற்றிக் கம்பராமாயணச் செய்யுட்கள் கொண்டு சிறந்ததொரு சொற்பொழிவாற்றி யாவரையும் களிப்பித்து, முடிவில் ''இதோ அப்பெருமான் அக்கோலத்தோடு நமக்குக் காட்சி அளிக்கிருன்'' என்று அப்படத்தைச் சுட்டிக்காட்டி முடித்தனராம் இவை போன்ற இவர் எளிமைப் பண்பைக் காட்டும் நிகழ்ச்சிகள் பல உள்ளன என்பர்.

இக்கட்டுரையால் சேதுபதிகளின் சிறப்பும், அவர் குலத்துதித்த ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களின் உயர் பண்புகளும், நற்பணிகளும், அவர் குணங்களை விளக்கும் சில வாழ்க்கை நிகழ்ச்சிகளும் ஒருவாருரைக்கப்பட்டனவாகும். இவை மேலே கூறியவாறுயானறிந்த ஒரு சிலவேயாகும். இன்னும் அவர் பாலமைந்த அரும்பண்புகளையும் அவற்றுக்குதாரணமான நிகழ்ச்சிகளையும் அவர்காலத்து வாழ்ந்தவராய் அவரை அறிந்தவர்களும் அவர்களோடு பழகிய பிறருமே உரைத்தற்குரியவராவர். மற்றும் ''செந்தமிழ் வளர்த்த தேவர்கள்'' என்னும் புத்தகத்தால் பல விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

தோற்றம்: 1867 மார்ச்சு-21.

மறைவு: 1911 டிசம்பர்-2.

# வள்ளல் பாண்டித்துரையின் நூற்றாண்டு வாழ்த்துப்பா

அன்பு. கருணையானந்தா,
தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

சீர்சால் செந்தமிழ்ச் சேது பதியரின்
பேர்சால் பெரும்புகழ் பேசார் யாரே?
தம்மினும் அறிவுடைத் தனயரைப் பெறுதல்
இம்மையில் பெறற்கரும் இன்பம் என்பரால்
உண்மை இஃதென உலகம் உணர்ந்திடத்
தண்மைப் பொன்னுச் சாமியின் சுதனாய்
வந்தனை வாழ்ந்தனை வாழ்க பல்லாண்டு!
சந்ததம் வளர்ந்திடும் தமிழ்ப்பணி தந்தனை
மதுரமாந் தமிழ்த்தேன் மாந்திடும் மனத்தினை
மதுரையிற் போந்தனை மாந்தர் பலர்பால்
கதியாந் தமிழ்க்குக் கம்பன் வள்ளுவன்
துதியாம் நூல்களின் சுவையுந் துய்த்திட .
இருநூல் கேட்டனை எவருந் தந்திலர்
அருளுளங் கொண்டனை அன்றைய நிலையெலாம்
நன்மை யுளத்துடன் நாட்டின் நலத்துடன்
தொன்மை நினைந்து துடிதுடித் தனையால்
தமிழகம் தமிழ்மொழி தமிழர்கள் எனுஞ்சொல்
அமிழ்தெனப் பரவிட ஆர்வம் மிகுத்திட
மாமது ரைப்பதி மாண்பெலாம் வளர்வுறப்

பூமண் டலமெலாம் போற்றிடும் நான்காம்
சங்கமே கண்டாய் தமிழ்ப்பாண் டித்துரைச்
சிங்கமே! நின்பணித் திருவுளம் போற்றுதும்!
பாவலர் மெச்சிடும் பார்த்திபர் ஏறே
நாவலர் போற்றிடும் நற்குணப் பேறே
தமிழ்ப்பே ரவையிடைத் தண்டமிழ்க் குமணனாய்
அவரவர் கவித்துவம் அறிந்து பரிசென
நவமணிப் பொருளெலாம் நல்கிய வள்ளால்!
எத்தனை ஆண்டுகள் இவரிருந் தாரெனார்
எத்துணைச் செயல்கள் இவர்புரிந் தாரென
உலகங் கேட்குமால் உய்த்துணர்ந் தொழுகினை
நிலையிலா வாழ்விடை நித்திய தத்துவப்
புகழ்மலை நீயெனப் பொன்னெனப் போற்றுதும்
வீழ்நாள் படாஅது வெற்றிச் செயல்பல
வாழ்நாள் பொலிந்திட வளமுறப் புரிந்த
காலமோ சிறிது கடமைநீ யாற்றிய
சீலமும் எம்மனோர் சிந்தனைக் கமுதே
ஐயநின் நூற்றாண் டருமைத் தமிழ்விழா
வையம் உள்ள வரையும் வளர்ந்திட
வாழ்த்துதும் யாமும் வணங்கி வாழ்த்துதுமே!

# பலகலை ஆயும் பண்புடைக் குரிசில்

செந்தமிழ்ச் செல்வர் பண்டித அ. முத்துசாமிபிள்ளை

தலைமைத் தமிழாசிரியர், தூய மரியன்னை உயர்பள்ளி, மதுரை.

பூவினுட் சிறந்து பொலியுங் கமலமும்
காவியும் ஆம்பலும் கவின்பெறு வாவியும்
கன்னலும் செந்நெலும் கமுகும் வாழையும்
இன்னறுங் கனிதரும் இளமரச் சோலையும்
எங்கணும் செறிந்து பொங்கெழில்கொழிக்கும்
மங்கலப் பாண்டி வளமிகு நாட்டின்
அகமெனத் திகழும் முகவையம் பதியில்
தகவுறு செங்கோல் தளரா தோச்சித்
தென்றமிழ் வளர்த்த சேதுகாவலர்தம்
பொன்றா மரபிற் புகழொடு பிறந்து
காட்சிக் கெளிமையும் கடுஞ்சொல் இன்மையும்
ஆட்சித் திறமையும் ஆள்வினை யுடைமையும்
வண்மையும் தண்மையும் வாய்மையும் தூய்மையும்
திண்மையும் நுண்மையும் சீர்மையும் நேர்மையும்
ஈரமும் தீரமும் இணையிலாப் புலமையும்
வீரமும் கொண்டு விளங்கிய பூபதி
பொன்னுச்சாமி புரிபெருந் தவத்தால்
நன்னர்த் தோன்றிய நயமிகு புதல்வன்;
பாண்டித் துரையெனப் பகர்தரு நாமம்
பூண்டபே ரறிஞன் பொருவிலாச் செல்வன்;
ஈண்டிய புகழோன் ஏழைபங் காளன்;
ஆண்டகைக் குரிசில் அளப்பருங் குணத்தோன்;
ஆங்கில மொழியையும் அழகுறு தமிழையும்
ஓங்கிய புலமைநன் குற்றவ ரிடத்தில்
முறையுடன் பயின்ற முதுபெரும் புலவன்;
நிறைகுடம் புரையும் நீர்மையன் கூர்மையன்;
கேட்டவர்ப் பிணித்துக் கேளா தவரும்

வேட்ப மொழி திறன் மிகமிகப் படைத்தோன்;
தேனெனப் பாலெனத் தீங்கனிச் சுவையென

வானவ ரமிழ்தென வழுத்துசெந் தமிழ் தமிழ்க்கவி
வளமுறப் பாடும் வன்மையிற் சிறந்தோன்
அளவிலாப் பெருமை அமைந்திடப் பெற்றோன்;
அரசன் சண்முகன் ஆதிய புலவர்
தரமறிந் தவரைத் தாங்கிய தமிழவேள்;
சிந்தனைச் சிற்பி; செந்தமிழ்ச் செல்வன்;
வந்தவர்க் கீயும் வள்ளற் பெருந்தகை;
தாயகப் பற்றும் தாய்மொழிப் பற்றும்
மேயவன் தூயவன் வீறுடைத் தோன்றல்;
பாலவனத்தப் பதிக்கர சாகி

நூலறி புலவர் நுண்ணிதின் வழுத்த
அறநெறி யதனில் அணுவள வேனும்
பிறழுத லின்றிப் பெரியவர் போற்றச்
செங்கோல் செலுத்திய சீர்சால் கோமகன்;
கங்கை வார்சடைக் கண்ணுதல் பாதம்
நெஞ்சகத் திருத்தி நினைந்துநெக் குருகி
அஞ்செழுத் தோதி அனுதினம் வழிபடும்
கொள்கையிற் றவறாக் குணப்பெருங் குன்று
வள்ளுவர் வகுத்த வழியினில் நடப்போன்;
மூவர் தமிழும் முனிவா சகமும்

தேவர் குறளும் தினந்தொறும் ஓதும்
நாநலம் கெழுமிய நல்லவன்; வல்லவன்;
பாநலம் பொதுளிய பன்மொழிப் புலவன்;
ஆரியக் கடலையும் அருந்தமிழ்க் கடலையும்
வாரிக் குடித்த மாதவச் செம்மல்
சிவஞானப்பெயர்த் தேசிகன் திருவடி
பவநெறி யகலப் பணியும் பண்பினன்;
சேக்கிழார் கம்பர் தெய்வப் புலவர்
ஆக்கிய நூல்களில் அமைந்த நயமெலாம்
தொகுத்துத் திரட்டிச் சுவைபட விளக்கும்

பகுத்தறி வாளன்; பாவலர் ஏறு.
ஒப்பறு பாண்டியர் உயர்வுற நிறுவிய

முப்பெருஞ் சங்கமும் முறையே மறைந்தபின்
அருந்தமிழ்ப் புலவரை ஒருங்குடன் கூட்டிப்
பெரும் பொருள் வழங்கிய பீடுசால் மதுரையில்
நான்காம் சங்கம் நலமுற நிறுவி
மேன்மைகொள் தமிழை விரும்பிக் கற்பவர்க் (கு)
உண்டியும் உடையும் உறையுளும் ஈந்து
தண்டமிழ் மொழியைத் தானே புகட்டியும்,
செந்தமிழ் எனப்படும் திங்கள் இதழை

விந்தைக்குரிய விதத்தில் நடத்தியும்,
பாண்டியன் நூலகம் பாங்குற அமைத்தும்,
ஆண்டு விழாவில் அறிஞரைத் திரட்டி
இலக்கிய நயமெலாம் இனிமையின் எடுத்துத்
துலக்குமா றவரைத் தூண்டியும் வேண்டியும்,
ஏடுகள் தொகுத்தும், இனியநன் னூல்களைப்
பீடும் அழகும் பெறவெளி யிட்டும்,
தேர்வுகள் வைத்தும் தேறினோர் தமக்குப்
பார்புகழ் பட்டமும் பரிசும் கொடுத்தும்,
எல்லா வளமும் இயந்தநம் தமிழ்மொழி

பல்லாற் றானும் பாரித்து வளரத்
தொண்டுகள் புரிந்த தண்டமிழ்ப் புரவலன்;
பண்டைப் பனுவல்கள் பலவும் தேர்ந்து
பன்னூற் றிரட்டும் பாவலர் விரும்பும்
தன்னிக ரில்லாச் சைவமஞ் சரியும்
போன்றபற் பல நூல் தோன்றிடத் தொகுத்த
ஆன்றவர் மதிக்கும் அருங்கலை விநோதன்;
காசறு முரசு கட்டிலில் துயின்ற
மோசு கீரனை முனியா தவற்குக்
கவரி வீசிய காவலன் போல

அவனியோர் ஏத்தும் அருந்தமிழ்ப் புலவன்
நாரணப் பெயர்கொளும் நல்லா சானின்
சோர்வறத் தனது தோளினை யுயர்த்திச்

சிவிறியால் வீசிய செம்புலச் செல்வன்;
அவிரிழை மடவார் அவாவும் அழகினன்;
விண்மீன் நடுவண் விளங்குறு மதிபோற்
பண்ணு றின்றமிழ் பழகறப் பயின்ற
புலவர் குழாத்தினுட் பொலிவுடன் அமர்ந்து
பலகலை ஆயும் பண்புடைக் குரிசில்
தெள்ளிய தமிழில் சீரிய முறையில்

வள்ளுவர் அருளிய மாண்புறு குறளைத்
திருத்திய வெள்ளையன் செய்கையை அறிந்து
வருத்தமுற் றதனை வாங்கித் தீக்கிரை
ஆக்கியவ் வெள்ளையற் (கு) அரும்பொருள் கொடுத்துப்
போக்கிய புண்ணியன் புவிபுகழ் கண்ணியன்;
கொள்ளை யடித்துக் குதுகலித் திருந்த
வெள்ளையர் மருண்டு விதிர்விதிர்ப் பெய்தவும்
தூத்துக் குடியெனும் துறைமுகத் திருந்து
நேர்த்தியாய் நம்கலம் நிமிர்ந்து செல்லவும்
திட்டம் தீட்டிச் சீரிதின் முயன்ற

உட்டுக ளில்லா ஒருவன் சிதம்பரம்
பிள்ளையின் வேண்டுகோள் தள்ளா தேற்றுக்
கள்ளமில் லாது கனிமொழி புகன்று
மிகுபொருள் உதவிய மேலவன் சகல
தகுதியும் படைத்த தமிழர் தலைவன்;
தன்னூன் பெருக்கிடத் தான்பிறி தூனுணும்
அன்னவ னிடத்தில் அருளிரா தென்று
வான்புகழ் வள்ளுவர் வாய்மலர்ந் தருளிய
தேன்சுவைக் குறளைத் தெளிவுறக் கற்றபின்
இறந்திடும் நிலையை எய்தினும் எய்துவேன்

மறந்தும் புலாலுணும் வழக்கம் கொள்ளேன்
என்றுசூள் இயம்பி இளமையில் தன்னுடல்
பொன்றும் நிலையைப் பொருந்திய போதினும்
ஊனுணல் நீக்கி உயிர்துறந் திட்ட

மானவன்; கொள்கையில் வழுவா வீரன்;
இத்தகு பெருமைகள் இயைந்திடப் பெற்ற
உத்தமன் வித்தகன் முத்தமிழ்க் காவலன்
பாண்டித் துரையின் பண்புக ளனைத்தும்
ஈண்டெடுத் தியம்ப எவரே வல்லவர்.
அன்னவன் நூறும் ஆண்டு விழாவைத்

தென்னக மக்களும் செந்தமிழ் மக்களும்
அன்னிய நாட்டினில் மன்னிய மக்களும்
சேர்ந்துகொண் டாடச் செய்திடல் வேண்டும்
தூர்ந்துபோ காமற் சுடரொளி வீசி
வாழிய அவன் பெயர் ! வாழிய அவன்புகழ்!
வாழிய தமிழென வாழ்த்துதும் யாமே!

அன்பளிப்பு

# வைத்தியசாரசங்கிரகம் எனும் புத்தகத்திற்குப் பாண்டித்துரைத் தேவரவர்களின் முதற்பதிப்பின் முகவுரை

---

உ

திருச்சிற்றம்பலம்

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டம், பழமையான நாகரிகங்கள் பலவற்றினும் விருத்தி பெற்றிருந்தது போலவே, மானுட வாழ்க்கைக்கு இன்றியமையாத மருத்துவ முறையிலும் பெருஞ் சிறப்புடையதாயிருந்தது. நம் முன்னோர்கள் ஆயுள்வேத முறையைத் தம் சூக்ஷ்ம தரிசனத்தால் கண்டெழுதி யடைந்த பெருமையைப் போல, பழங்காலத்தில் வேறெந்நாட்டாரும் அடையவில்லை யென்பது திண்ணம். நம் சென்னைக் கவர்னராக விருந்த ஆம்தில் பிரபு அவர்கள், வைத்தியசாலை ஒன்றைத் திறக்க நேர்ந்தபோது, "ஆதியில் அரேபியாவிலும், அங்கு நின்று ஐரோப்பாக் கண்டத்தினும் பரவிய வைத்திய முறையெல்லாம், பழங்காலத்தில் இந்தியாவினிடத்தினின்று பெற்ற பெருஞ் செல்வங்களே என்று கூறிய விஷயம், பலருடைய நினைவிலும் இன்னும் மறக்கப்படாதிருக்கலாம். இவ் வைத்திய முறையில் நம் பெரியோர்கள் காட்டிய அற்புதப் பெருமை நம்மால் இங்கு அளவிடுந்தரத்ததன்று பூர்வீகரால் எழுதப்பட்ட ஆயுள்வேத நூல்கள் வடமொழியினும் தென்மொழியினுமே மிகுதியாகவுள்ளன. நம் நாட்டுச் சிறந்த வைத்தியர்கள், அப்பெரியோர் எழுதிய முறையையே கையாளுகின்றனராயினும் பிற்காலத்திற்போலி வைத்திய நூல்கள் பல, முன்னோர் பெயரை வைத்து வெளியிடப்பட்டமையால், பொதுவாக வைத்திய நூல்களெல்லாம் பெருங்குழப்பத்தைத் தருவனவாயின. முன்னோரியற்றிய நூல்களென்று பொய்யும் புனைந்துரையுமாக இக்காலத்திலும் வெளியேறும் புத்தகங்களோ எண்ணிறந்தன. இவ்வாறு நம்மவர் செய்யும் பெருந்தவறுகள் உலகத்துககுப் பெருந்தீங்கு தருவதோடு, நம் முன்னோர் கண்ட ஆயுள் வேதத்தின் உண்மைப் பெருமையை

யெல்லாம் தலைகீழாக்கியும் விடுகின்றன. ஆதியில் நம் தேசத்தினின்றுபரவிய வைத்திய முறை, ஏனைய நாடுகளில் அவ்வந்நாட்டாரது விடாமுயற்சியாலும் ஆராய்ச்சியாலும் மென்மேலும் பெருகிவளர, நாம் அதனைப் பேணிப் பேணிப் பெருமைப்படுத்தாமற் குறைவுபடுத்துவது, நமக்கே பெரிதும் வெட்கமும் துக்கமும் உண்டாக்கத்தக்கது.

என் அரும்பெறற் றந்தையாரவர்கள், நம் வைத்திய முறையின் பெருமையையும் அதன் பிற்கால நிலையையும் உள்ளத்திலுன்னி, முன்னோரது உண்மை வைத்திய முறைகளையெல்லாம் எளியோரும் தெளியவுணர்ந்துகொள்ள வேண்டி, இராமநாதபுரத்தில் தம்மிடத்தில் ரைட்டர்வேலையிலிருந்தவரும், தமிழ்வைத்தியர் பரம்பரையில் வந்தவரும், பிரபல அநுபவ சுதேச வைத்தியரும், இங்கிலீஷ் யுநாநி வைத்திய முறைகளுந்தெரிந்தவருமாகிய ஸ்ரீமத் முத்துக்கருப்ப பிள்ளை என்னும் ஒருவரைக்கொண்டு இவ்வைத்திய நூலையெழுதுவித்தார்கள், அவர்கள். இந்நூலுட் கூறிய மருந்துகளுட் பெருன்பான்மையும் தங்கள் பொருட்செலவிலே செய்வித்துப் பலருக்குங் கொடுத்து அநுபவமானவைகளையே இதனுட்சேர்க்கும்படி செய்வித்தார்கள். பின்னர் முதலிற்பதிப்பித்த புக்தகங்கள்யாவுஞ் செலவழிந்து போனமை தெரிந்து, அதனைத்திரும்பவும் பதிப்பிக்கவேண்டுமென்று யான்கொண்டிருந்த எண்ணத்தை அறிவித்தகாலத்து, சிவத்தைப்பேணுந் தவமிக்குடையரும், அண்டினர்க்காக்கும் அருண்மிக்குடையரும் என்னுள்ளிடங்காணு அன்பிற்குரியரும், எனதின்னுயிரனைய நன்னிலைத்துணைவரும்,வரையா தளிக்கும் வள்ளலுமாகிய, இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் இராஜா எம்.பாஸ்கரசேதுபதியவர்கள் தாமே அதற்கு வேண்டும் பொருளுதவிசெய்து வெளியிடுவதாகச் சொல்லி, அவ்வாறே இற்றைக்கு 10 வருஷங்கட்குமுன் இதன் இரண்டாம் பதிப்பை அச்சிடுவித்துதவினர்கள். இவ்விரண்டாம் பதிப்பில் முதற்பதிப்பினிலும் அநேக விஷயங்கள் அதிகமாகச் சேர்த்துள்ளமை, பலரும் நன்கறிந்ததே. இவ்விருமுறையிலும் அச்சிட்ட பிரதிகளனைத்தும் செலவாயினமையாலும், என் நண்பரிற் பலர் இப்புத்தகம் வேண்டினமையாலும் அதனையே மூன்றும் பதிப்பாக அச்சிடக்கருதி இந்நூலியற்றிய வைத்தியர்

முத்துக்கருப்பபிள்ளையவர்களாலேயே தம்மனுபவ ஆராய்ச்சியால் எழுதிவைக்கப்பெற்றிருந்த மூலிகைகளின் சத்துக்கள், தைல வகைகள் முதலியவற்றை அப்பிள்ளையவர்களது புத்திரரும், பிரகிருதத்தில் வைத்தியருமாயிருக்கும் கிருஷ்ணசாமி பிள்ளையென்பவரிடமிருந்து பெற்று இதனுட்சேர்த்துத் தக்கவாறு ஆராய்ந்து மதுரைத்தமிழ்ச்சங்கப் பதிப்பாக இம்முறை பதிப்பிக்கலாயிற்று. இந் நூலுடைய அருமை பெருமைகளெல்லாம் இதனைமுற்றும் நோக்குமிடத்து நன்கு வெளியாமாதலால் அதனை இங்கெடுத்தெழுதல் மிகையாம். நம் நாட்டார்க்கு இந்நூல் பெருநன்மை பயக்குமென்று உறுதியாக நான் நம்புகின்றேன்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
பராபவ-ஞு வைகாசி மீ 3உ

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை

# திருப்பணிமாலை எனும் புத்தகத்துக்குப் பாண்டித்துரைத்தேவரவர்களின்முகவுரை

—✻—

உ

திருச்சிற்றம்பலம்

திருவாலவாயுடையார் திருப்பணிமாலை என்பது, துவாதசாந்த க்ஷேத்திரமும், இறைவன் எண்ணெண் திருவிளையாடல்களை இயற்றியருளிய ஸ்தலமுமாகிய திருவாலவாயிலுள்ள திருக்கோயில் திருக்கோபுரம், மண்டபம், பொய்கை, வாகன முதலியசிவதர்மங்கள் இன்ன இன்ன காலத்து இன்னார் இன்னாரால் இவ்வாறு இயற்றப் பெற்றன என்பதை முறைப்படத் தமிழ்ப்பாவில் அமைத்துப் பாடப்பெற்றதொரு நூலாகும். இத்தகைய திருப்பணிமாலைகள் முக்கியமான சிவாலயங்கட்கெல்லாம் முன்னோரால் அமைக்கப் பட்டுள்ளன என்பர். இம்மதுரைத் திருப்பணிமாலை பெரும்பாலும் கட்டளைக்கலித்துறைகளாலும் சிறுபான்மை ஆசிரிய விருத்தங்களாலும் பாடப்பெற்றது; இம்மாலை இயற்றியவர் இன்னாரென்பது நிச்சயிக்கக்கூடவில்லை. தாண்டவமூர்த்திப் பண்டாரம் இதனையியற்றியவர் என்பர் சிலர். இந்நூற்பாடல்களிற் சில சிறந்தும் சில சிறப்பின்றியும் அமைந்திருத்தலை நோக்கும்போது இந்நூல், பலராற் பாடப்பெற்றதுபோலும் என்று கருதலாம். எங்ஙனமாயினும், மதுரைத் திருக்கோயில் சம்பந்தமான புராதன சரித்திரங்கள் பலவற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இந்நூல் விளக்குவதென்பதிற் சிறிது ஐயமில்லை.

இந்நூலிற் சிற்சில பாடல்களைச் சிலர் வெளியிட்டிருப்பதன்றி நூன்முழுதும் இதற்கு முன்பு வெளிவந்திலது. இத்தகைய நூல் புராதனத் திருப்பணிகளை மட்டுமேயன்றி, அச்சிவதர்மங்களை நடத்திக் கீர்த்திபெற்ற புண்ணியசீலர் பலர் வைபவங்களையும் நன்கு விளக்குதலால், இந்நூலைப் போற்றிவைத்தல் இன்றியமையாததென்று கருதினேன். ஆனல், நூன்முழுதும் சுத்தமாகவமைந்த பிரதி கிடைத்ததில்லை. மதுரை ஸ்ரீ பரமசிவபட்டரவர்களாலும் மகாராஜராஜஸ்ரீ மு. ரா. அருணசலக்கவிராயரவர்களாலும் கிடைத்தனவும், இறுதியிற் சிதைந்தனவுமான இரண்டு

பிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்து இந்நூல் பதிப்பிக்கலாயிற்று. எழுதியோரால் மிகுதியும் வழுப்பட்டுக்கிடந்த இப்பிரதிகளை வைத்துப் பதிப்பித்த என் முயற்சியிலுள்ள குற்றங்குறைகளை அறிஞர் எனக்கறிவிப்பினும், நல்ல பிரதிகளுடையவர் அவற்றையனுப்பினும் அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிடுவதோடு, அன்னோர்பால் என்றும் நன்றியறிந்தவனுமாவேன்.

இந்நூலில், திருப்பணிசெய்த முன்னையோர் வரலாறுகளுள் நெல்ஸன் துரையவர்களது "மதுரைநாடு" (The Madura Country) முதலியவற்றாலும் வேறுசில தமிழ்நூல்களாலும் தெரியவந்த விஷயங்களை அவ்வப்பாட்டின் கீழ்க்குறிப்பில் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இம்மாலையிற்கண்ட திருப்பணியிடங்கள் சில இப்போது முற்றும் மாறிவிட்டன; இவை விளங்காது போயினும், ஏற்றத் திருப்பணியிடங்கள் பெரும்பாலும் கீழ்க்குறிப்பில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மதுரை ஸ்ரீ பரமசிவப்பட்டரவர்கள் இவை சம்பந்தமாகத் தெரியவேண்டிய விவரணங்கள் சிலவற்றை விளக்கி உதவிபுரிந்தார்கள்.

"மதுரைத்தலவரலாறு" என்னும் பெயர் கொண்டதும் அவ்வளவு சிறப்பில்லாத தமிழ்நடையில் அமைந்ததுமான சிறு நூலொன்றின் பழம் பிரதியும் இத்திருப்பணிமாலையுடன் கிடைத்தது. இதனுட்கண்ட சரித்திரங்களால் மதுரையைப்பற்றிய பல விஷயங்களைச் சுருக்கமாக நாம் அறியக்கூடும். பழைய சில சாஸனங்கள் பாஷை நயத்தில் தாழ்ந்தனவாயிருப்பினும், அவற்றைத் தமிழபிமானிகள் அறிந்து மகிழ்வதுபோல, இந்நடை நூலையும் விஷயநயம்பற்றிக் கொள்வார்களென்று நம்பி அதனை இம்மாலையின் முதலிற் பதிப்பித்திருக்கிறேன். இதனுள் திருப்பணி செய்தோர் பெயர் காலம் இடம் முதலியவை ஒரு கோவைப்பட எழுதியிருப்பது எல்லாருங் கவனித்தற்குரியது. இங்ஙனம் பெருஞ் சிவபுண்ணியங்களை நடத்திய தர்மவான்களுடைய திருப்பணிவிவரங்களைத் தமிழுலகத்துக்கு அறிவித்து வெளியிடுந் திருப்பணியை எனக்களித்த ஆலவாயடிகளின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

**பாண்டித்துரை,**

பாண்டித்துரைத் தேவரவர்களால் தொகுக்கப்பெற்ற

‘பன்னூற் றிரட்டு’ என்னும் நூலுக்கு தமிழ்த் தாத்தா

## டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் அளித்த

## சிறப்புப்பாயிரம்.

---

பூமலி சந்தக் காமலி வரைவா
ழருந்தவ னன்பிற் புரந்தருண் மேன்மை
பெற்றே யுவமை யற்றே யிலங்கு
நன்மொழி யாய தென்மொழித் துறையி
லற்புமிக் கான்ற பற்பல கவிஞர்
நவையெலாங் குமைத்துச் சுவையெலா மமைத்தே
யாக்கிய வினிமை தேக்கிய பன்னூற்
பரப்பெலா மாயு ணிரப்புறு மாந்தர்க்கு
ஓதுறல் சிறிதுமொல் லாதென நினைந்து
கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல வென்னு
மேலவர் தொடர்பைச் சால மதித்தே
யாழித் தரைபுகழ் காழித் தவப்பயன்
முதலிய பெரியோர் நுதலிய தமிழ்மறை
யென்னும் பெயர்கொடு மன்னுபன் முறைகளுந்
துங்கக் கூடற் சங்கத் தமர்ந்த
தொல்லிசைப் பயனுர் நல்லிசைப் புலவ
ரருளிய மேன்மைப் பொருளிய னூல்களும்
பொருவில் பெருமைத் திருவள் ளுவர்முத
லான்றோ ரருள்சுவை சான்றபன் னூல்களு

மருத்திகூர் புலமைத் திருத்தகு தேவ
னாதியா மறிஞ ரோதிய வாய
மங்காச் சுவைசா லைங்காப் பியத்துட்
கிடைப்பன வாய தொடைக்கவி நூல்களுஞ்

செப்பமார் கச்சி யப்ப வாசான்
முன்னாப் பகர்பல செந்நாப் புலவரெம்
மருளிய லகற்ற வருளிய நூல்களு
நலமுறு மகிழ்விற் பலமுறை யாராய்ந்
துட்டெளி வளிக்குங் கட்டெளி வனையவாய்

மன்பதைக் களவா வின்ப நிரப்பி
யிழுக்க மகன்ற வெழுக்க வகைநுவல்
பாடல்க டம்மை நாடல்செய் தெடுத்தே
பாத்தே பால்வகை யாத்தே நிறுவித்
தொன்னூற் றிரட்டெனச் சொல்ல வேசிலர்

தென்னூற் றிரட்டெனச் செப்ப வேசிலர்
நன்னூற் றிரட்டென நவில வேசிலர்
பன்னூற் றிரட்டெனப் பகர்பெயர் நிறீஇ
யளித்தா னம்மவொன் றவனா ரெனினே
யுறுஞ்சிறப் பமைந்த குறிஞ்சிமுன் னாய

திணைவளம் பழுநிய செம்பிநன் னாடன்
மாசுதுன் னாவணம் பூசுவெண் சாந்தின்
விதுவைநேர் மாடப் புதுவைமா நகரான்
பவஞான மறுத்துயர் சிவஞானத் தேவர்
பவுத்திர னெனவரு பவித்திரக் குரிசில்

ஆரிய முதலாஞ் சீரிய மொழிகளி
லுளவென வுரைக்கும் பளகறு சுவைசால்
பல்கலை களுமிகப் பல்கலை மருவ
வளித்தே புலமைநன் றாக்கிய தேக்கட்
டளித்தார்ப் பொன்னுச் சாமி வரோதயன்

பண்ணிய வளவில் புண்ணியப் பேற்று
லன்னவ னெனவே நன்னர்வந் துதித்தோன்
தீதிகந் தோங்குஞ் சேதுநன் னாட்டுக்
காசா யமல பரசிவ பத்திக்
காகர மாயருட் சாகா மாய்வள

மகவையிற் றழீஇய முகவை மாநகரி
லொண்மைப் பாற்கர னொத்தொளிர் வெண்குடைத்
தண்மைப் பாற்கர சாமி சுரேந்திரற்
கண்ணிய வன்பன் புண்ணிய வின்பன்
எவ்வமி லருந்தமி ழின்சுவை யோடு

சைவவின் சுவைதெரி வையைமா நதியான்
சால வனத்தந் தருபவை யகற்றிப்
பால வனத்தம் பாலித் திடுவோன்
நேரியன் பரியைக் கோரமா மென்றும்
வீரவெஞ் சிலைக்கைச் சேரலன் பரியைப்

பாடல மென்று நீடுசீர்க் கவிஞர்
செப்புறக் கொட்புறு திட்ப வெம் பரியான்
செந்தமிழ்ச் சோம சுந்தர விலாசன்
அமிழ்து றழினிய தமிழ்வலோர் தமக்கு
மருமறை நாவி னந்தணர் தமக்கு

மாற்றி காட்சிப் பேறுடை யார்க்குந்
திசைபோம் பெரும்புக ழிசைவல் லவர்க்குஞ்
செயரிலாத் தேர்ச்சி வயிரியர் தமக்கு
மற்றவை மரபிற் கற்றவர் திரட்கு
மாதுய ரொடுவரு மாதுலர் தமக்கு

மடையா வாயி லகன்கடை யுடையான்
வாய்ந்தநுண் ணூல்பல வாய்ந்து மகிழ்ந்தே
நாவலர் பல்லோர் பாவலர் பல்லோர்

சூழும் படிதழீஇ வாழும் பெருமையன்
அன்னமு மாவு மன்னவா ணவர்பலர்க்
கனமுந் தனமு மாடையு மேடையுங்
கொடுத்தே மிடியைக் கெடுத்தே மகிழ்வித்
தருந்தமிழ் பயிற்றிப் புரந்திடு மேன்மையன்
தீயவெம்பிணியா லாயபஃ றுன்பிற்
காற்ரு மாந்தர்க் கருந்துணை யானேன்
இருவே றுலகத் தெனுங்குறட் கெதிரா
வருவே ளொழுக்க மாண்பினி லதிகன்
குளிரின் சொல்லொடு மிளிர்குலோத் துங்கன்
அகத்தூக் கேமுனந் தொகுத்தே மென்னு
மக்குறை யறவரு முக்கிர பாண்டியன்
வருத்த மகற்று திருத்தகு தேவன்
களங்க மிலாது விளங்குபொய் யாமொழி
மெச்சி யடைந்து நச்சினர்க் கினியன்
தீதிய லாதுசெய் நீதிநூல் பலவுந்
தெரிமே லவர்சொல் பரிமே லழகன்
பொடியார்க்கு மேனி யடியார்க்கு நல்லான்
புலவர்க டுயர்களைந் திலகு கற்பகம்
வந்தடை வோர்துயர் சிந்துசிந் தாமணி
மண்ணினு மீக்கிளர் விண்ணிலு மமைந்த
வண்மைய னெனவே யொண்மையி னுலுயர்
சீரியர் சொலமிளிர் பாரி சாதம்
தால மாந்தரின் ருலந் துறந்தெனத்
தாலந் துறக்குந் தமிழ்த்தொன் னூல்கள்
பழுதா காவ்ணம் பரிசோ திப்பித்
தெழுதா வெழுத்தி லியைவித் திடுவோன்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
யாக நினைப்போர் சோக மகற்ற

வானினு மானினும் வழங்குசெங் கரத்தான்
தேனினும் பாலினுந் தித்தித் தோங்குந்
தண்பா மாலை சாற்றுவோன் புறப்பொருள்
வெண்பா மாலை வெளிவரச் செய்தோன்
திருந்து கவின்சே ரருந்தமிழ் மடந்தை
யணிமே கலையா மணிமே கலையை
யாவரும் பெறச்செய் மாவுப காரி
பண்ணமை விழுச்சீர்த் தண்ணுமை யொடுங்களத்
தேழிசை யோடும் யாழிசை யோடு
மெழுது மறைக ளிசைத்தே யன்பிற்
றெழுது பல்லோர் சூழ்ந்திருந் தேத்த
வுருத்திர சின்ன மருத்தியிற் றாங்கி
மனமொழி மெய்யிற் றினமொழி வின்றி
யீசனை யன்பிற் பூசனை புரிவோன்
சிவனடி யவரைச் சிவனென மதித்து
வேண்டிற் றுதவும் விழுச்சீர்ப்
பாண்டித் துரைப்பெயர் படைத்தகோ மானே

—*—

பாண்டித்துரைத் தேவரவர்களால் தொகுக்கப்பெற்ற
'பன்னூற்றிரட்டு' என்னும் நூலுக்குத் தேவகோட்டை

## வீர. லெ. சிந்நயச் செட்டியாரவர்கள்
## அளித்த சிறப்புப் பாயிரம்

பூமகள் கெழீஇய காவரு மார்பக்
கரியவன் செருக்கி விரிநிலங் கீள்பு
தன்னமு மெய்யாப் பொன்னடிக் கடவு
ளருமறை கிளந்த குருமலர் வாயாற்

பொருத்தபு கொங்குதேர் திருத்தகு மதிமலி
யென்றிம் முதலாத் துன்றுமுச் செய்யுளோ
டகப்பொரு ளியலை யுகப்பக் கழறியும்
தென்றல்வெற் புறுவற் கன்றறி வுறுத்தும்
அவைக்களத் தமரூஉச் சுவைத்திறன் றெரிந்துங்

குரவர் நால்வர் பரவிசைப் பனுவல்
கேட்டாங் கனையர் வேட்டாங் கருளியும்
விறந்தன மொழியிற் சிறந்தன் றுதுவெனுப்
புலனறை போய கலரு முணர்பாக்
காராக் காதலிற் பாராட் டோவான்

முன்னி வளர்த்த கன்னி நறுந்தமிழ்
மின்பயி றேஎத்து மன்பதை யனைத்து
மிம்மை மறுமை செம்மைவீ டாய
நயன்குலா மும்மைப் பயன்பெறற் பொருட்டுநூல்
பலவற் றுள்ளுங் கலவிக் கிடந்த

வொழுக்க வகைநுவ லிழுக்கறு பாவினங்
கோத்து நிரலே யோத்து முறைவகுத்து
இரங்கொலிப் பாற்கடற் பரம்பிய வமிழ்தினை
மாயோன் றிரட்டி மீயோர்க் களித்தெனத்
தெருணனி கொளுத்தும் பொருளொருங் கோருழி

மொண்டுநா வலர்கூட் டுண்டு மகிழிய
வின்னூற் றருஅப் பன்னூற் றிரட்டெனும்
பெயர்த்தொன் றம்ம வியற்றி யுதவினன்
ஒளிமான் முன்னர்க் களிமயி லகவப்
பருவக் கொண்மூ வருகுலாய்த் தவழ்ச்சி

திருவா ணைக்காப் பெருமா னுவப்பத்
தோட்டிமைப் பொறியை யாட்டிமா லுழல்வு
கடுக்கு மல்லற் றடுக்கற் குறிஞ்சியும்
வெள்ளிற் றிரள்கனி முள்ளிடைச் சேக்குதல்
தயிர்தக வாடவ ரூயிர்கடை தொறுவியர்

பொன்றிணி மூலைத்தலை வென்றிகோள் வெஃகி
மூசிய வைந்நுதி யூசி நடுவ
ஞேன்பிழைப் புறபூங் கான்பொலி முல்லையும்
செந்தளிர் பொதுளி யுந்துதே மாவின்
மைக்குயிற் றெழுதி தொக்ககூஉம் பெற்றி

பளகுதீர் கடைசியர் கிளவியை வெந்நிட்
டுறந்தெழு மானத் திறந்துபா டுள்ளிக்
கொழுந்தழ னுப்பண் விழுந்துடல் கருகி
மேற்ரு வுருப்ப மாற்ரு தலறலைத்
துணைதரு கிற்கும் பணைகளுன் மருதமும்

உமண்டியர் வாள்விழிக் கமன்றதெம் முழுதுங்
கோறு மென்மரின் வீறுசால் பரதவர்
கயலுடங் கந்தோ மயிலைக் குலத்தை
வலையகப் படுத்து நிலைகுலைத் தட்டுவாய்ப்
பெய்திறு மாக்கு மொய்திரை நெய்தலும்

ஈண்டிச் சிறந்துள பாண்டிப் பரண்டில்வாய்
மாயிரு ஞாலத் தேயிருள் வளாகம்
பெரும்புறப் புணரி மருங்குசூழ் நேமிப்
பொற்றை நனந்தலை மற்றைய விலங்கல்
வேறுபஃ றிறத்த யாறென விவற்றைப்

படைக்கும் வண்ணமென் னடைத்தனி யோதிம
னாய்ந்துகை பழகியர் வேய்ந்தன பொருள்போற்
புடையுடுத் தீர்ம்பா சடைமிடை பொழிலுந்
தடம்பாம் புரியுஞ் சுடர்ந்தோங் கெயிலு
நீண்மணி மாடமுஞ் சேண்மலி னொள்ளலும்

வயங்கா நின்ற வியன்சீர் முகவைப்
பேரூ ராளி போரூ ராளி
கல்வி யுரத்தன் செல்வி யுரத்தன்
பொன்னுச் சாமி முன்னைப் பிறவிதோ
றாற்றற னுருக்கொடு தோற்றியாங் கவன்பா

விளைய பசுங்கான் முளையென முளைத்தசேய்
நோக்குமங் கையர்க்குப் போக்குபு கலன்கலை
யலர்பெரி தணிவித் திலகெழிற் செவ்வியன்
விண்ணந் தாங்கி கண்ணொன் றிரண்டா
னிமையாப் பார்ப்பினு மமையா தென்ன

வாயிர மெய்துமா மேயதொல் வளத்தான்
அறலே பொழிநீ னிறமுகில் வெள்கக்
காசும் பொலனுந் தூசு நீர்விராஅய்
வறியார்க் கீத்தெதிர் குறியா வள்ளல்
எண்ணில்விம் மிதத்தொழில் பண்ணிவை வல்லுநன்

மன்றமி ழாசான் குன்றிமெய் குறுக
வில்லா தல்ல தெல்லா மரபுளி
யோதி நுனித்தோர்ந் தேதிலாக் கிசைத்துச்
செவ்வே தானு மவ்வா றியங்கியான்
மயற்கையி னீங்கிய வியற்கைநுண் ணறிஞன்

பொறையரு ளின்சொ லுறுதி வாய்மை
யின்னன வுயர்ந்த வென்னபண் பிற்கு
நாட்டின ரெடுத்துக் காட்டுதற் கமைந்தகோ
நீறுகண் டிகையுந் தேறுமைந் தெழுத்து
மொருவா துளத்துமெய்ப் பொருளாப் பற்றிச்

செறிவுறு மாவியு மறிவொரூஉம் பண்டமுங்
கண்ணுதற் கடிமையவ் வண்ணல துடைமை
யென்ற வுண்மை நன்று தெள்ளியோன்
கூற்றடர் குரைகழல் போற்றினன் போதுதூ
யொழிவொழி யன்பின் வழிபடு குரிசில்

உன்னு போழ்தெனக் கென்னினு மினியன்
தொழுதகை யுக்கிர வழுதிப் பேரான்
ஈண்டைத் துறுநர் பாண்டித் துரையென
வழங்கவெண் மாதிர முழங்கிசை யவனே.

# பாண்டித்துரைத் தேவரவர்கள் மறைந்த ஞான்று புலவர்கள் பாடிய கையறு நிலைப்பாக்கள்

]—○—[

[குறிப்பு:-அமிழ்தினுமினிய நந்தமிழ்மொழியைமுன்னர்முதலிடை கடையென்னும் முச்சங்கம் நிறுவிப் பல பாண்டிய மன்னர்களும், சேர சோழ மன்னர்களு மேனைய சிற்றரசர்களுஞ் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தனர். அக்காலத்து நந்தமிழ்மொழிபல்வகை நலன்களும் நிறைந்து ஒப்புயர்வற்று விளங்கியதென்பது யாவரும் நன்கறிந்ததே. பிற்றைஞான்று தமிழ்மொழி யாதரிப்பாரின்றி முன்னிருந்த சீருஞ்சிறப்புங் குன்றிப் படிப்பாருங் கேட்பாருமின் மையால் தாயில்லாச் சேய்போல் நிலைதளருமிக்காலத்துத் தமிழை யபிமானித்து மதுரைத் தமிழ்ச் சங்கந்தாபித்துத் தந்தேக சிர மமும் பொருட் செலவும் நோக்காது தமிழபிவிருத்தி யொன்றே கருதிப் பாடுபட்டுத் தமிழ்ப்புலவர்களிடத்துப் பேரன்பு பாராட்டி வந்த பாலவனத்தம் சமீன்தார் பாண்டித்துரைத் தேவரவர்கள் காலஞ்சென்றமைக் காற்ருதிரங்கிப் புலவர்கள் பாடிய பாடல்கள் எண்ணிறந்தன. அவை அக்காலத்துச் 'செந்தமிழ்' இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு:—]

1. தமிழுலகப் பெருஞ்சேயே தமிழ்த்தாயின் றமிழ்த்தாயே
தங்கு மன்புச்
சிமிழெனுநற் சிந்தையனே சீர்த்திதரும் புந்தியனே செல்வ மிக்கா
யுமிழுமெழிற் றிருமுகனே யுயர்பாண்டித் துரையரசே யுனைத்தோற்
றிந்நா
ளமிழ்கிறதே தமிழுலகம் பெருந்துயர வளக்கருளே யந்தோ
வந்தோ.

2. தேசிடுநற் றிருமேனி திகழ்பாண்டித் துரைத்தேவிற் றேன்பா
லென்னப்
பேசுமொரு பிரசங்கப் புலமைக்குந் திருவிற்கும் பிறவி தீர்த்துச்
சாசுவதந் தருமரிய சைவநிலைச் சார்பிற்குந் தனிவண் மைக்குங்
காசினியிற் சிறந்தாராங் காட்சியரைக் காண்பதுமெக் காலமேயோ

3. விரோதி கிருதே விருச்சிகமே யுங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா—குரோதத்தாற்
றம்மிற் கடையாஞ் சனியு மிரேவதியு
மும்மிற் கலந்துற்ற தோ.

:— R. வேங்கடாசலம் பிள்ளை,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

புவிக்கினிய பெருங்குணமும் புகழ்க்கினிய பெருங்கொடையும்
புரிவிற் போந்தார்
செவிக்கினிய பணிமொழியான் முகமனுரை பகர்பரிவுந்
தெய்வக் கம்பன்
கவிக்கினிய பொருள்விரிக்கு மொழித்திறனு மினியெவர்பாற்
காண்ப மென்னத்
தவிக்கவெமை யுலகிடைநீத் தொருநீவிண் புகுந்ததுதான்
றகவோ வையா

:— அரங்கசாமி ஐயங்கார்,
பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள்
அரண்மனை வித்துவான்.

1. மதியெழநா ணின்றித்தா ரகையெழல்போற் றமிழ்ச் சங்கம்
வளர்த்து நீதான்
றுதிமிகத்தோன் றிடவந்தத் தமிழறியாப் பலமன்னர் தோன்றி
நின்றூர்
மதிமறைநாட் டாரகைதோன் றிடல்போற்பாண் டித்துரை நீ
மறைந்த விந்நாட்

பதிதொறுமம் மன்னரிருந் தனரவராற் றமிழ்க்குமிகு
பயனென் னுமே.

2. மருவுசெந்நெல் லாலாய முளைமீண்டு மந்நெல்லாய் வருதல்
போலப்
பொருவில்கல்வி யறிவொழுக்க மன்பருளா சாரங்கள் பொருந்தி
வாழ்ந்த
விரிபுகழ்ப்பாண் டித்துரைதன் பொருளாக வருதலினால்
விளங்கு மன்னு
னுரியகுணம் பெறுசோம சுந்தரபாண் டியன்வாழி யூழி தானே.

:— சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்,
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்.

1. வடமொழியொன் றேதேவ பாடையென்று ரம்மொழியை
மனித ரானோர்
திடமுடன்கற் றரிதுபோற் றென்மொழியைத் தேவரெலாந்
தினமுங் கற்க
வுடனேபோய்க் கற்பிப்போ மெனநினைந்தோ வொன்றேனு
முரைத்தி டாம
லடலரசர் புகழ்பாண்டித் துரையேவான் புகுந்தாய்நின் னறிவு
நன்றே.

2. கொலைபுரிதல் பாவமெனத் தெரிந்திருந்துந் துப்பாக்கி
கொண்டு சுட்டுஞ்
சிலைவளைத்துங் கொன்றுவிலங் கினம்பறவை தின்று திரிதீயர்
போலா
துலைமெழுகாய் மனமுருகி யவற்றுயிரை யுன்போல வொருசற்
றேனும்
விலைகொடுத்து மீட்டினிக்காப் பார்யார்பாண் டித்துரையே
விளம்பு வாயே.

3. ஓங்குதமிழ்ப் புலவர்களைப் பண்டைநா ளரசர்போ லுவகை
பூத்துத்
தாங்குசம மரியாதை செய்துகவி கேட்டவர்தந் தகுதி நோக்கி

வாங்குகெனச் செம்பொனுத வியபாண்டித் துரைவள்ளால்
மற்றுன் போல
வீங்குதே டியுமொருவ ரெதிர்ப்படுவா ரில்லையினி யென்செய்
வோமே.

:— மு. ரா. அருணசலக்கவிராயர்,
மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்.

கன்னிமுத லிமயவரை காறுமுளோர் பணிசேது காவ லற்கோர்
மன்னுயிராய்த் தமிழ்நாட்டு வாணருக்கோர் கற்பகமாய்
மதுரைச் சங்கந்
துன்னுதமிழ் விற்பனர்க்கோர் சுடர்மகுட மாம்பாண்டித் துரை நீ
முன்வாழ்
பொன்னுலகம் போயெம்மைப் புலம்பவிட்டா யென்செய்வோம்
புகலு வாயே.

சர்க்கரை இராமசாமிப் புலவர்,
மன்னார்குடி கல்லூரி தமிழ் புலவர்.

கம்பரேயிம் பர்வந்து கவித்திறத்தின் கருத்துணர்ந்து கழறு
மாபோ
லிம்பருமும் பரும்புகழ விராமகதைப் பெரும்பொருளை யினிதாய்ச்
சொல்வா
யும்பருல கத்தவர்க்கு முறுராம கதையமுதை யுவந்துண் பிக்கப்
பம்புபுகழ்த் தமிழ்ப்பாண்டித் துரையரசே படர்ந்தாயோ பகரு
வாயே

G சதாசிவம்பிள்ளை,
நாகை ''நீலலோசனி' ஆசிரியர்'

பாண்டித் துரைச்சாமிப் பாவலனே பாவலர்கள்
வேண்டியன வளிக்கும் வித்தகனே வித்தகமா
ராண்டகையே பாரா ளரசே யரசரெலாம்
வேண்டி யழைக்கும் விருந்தேவான் சென்றனையே

:— ஐ. சாமிநாத முதலியார்,

செந்தமிழோங் கியகாலத் தினிற்பாண்டி மன்னர்பலர்
தெய்வச் சங்க
முந்திவளர்த் தாரென்ன லதுசிறப்போ தமிழ்மணமே முற்றுந்
தீர்ந்த
விந்தநா ளினிற்சங்க நீவளர்த்தா யெனல்சிறப்போ
யெழினற் கல்விச்
சுந்தரஞ்சே ருயர்பாண்டித் துரைச்சாமிச் சீமானே
தூய்மை யோனே.

பூவை, கலியாணசுந்தரமுதலியார்,
சித்தாந்தசரபம்-அட்டாவதானம்.

அன்னமளித் தாய்பலருக் காடையளித் தாய்பலருக் களவி லாத
சொன்னமளித் தாய்கலையின் றுறையளித்தாய் பலப்பலர்க்குத்
தூய செந்நா
மன்னமறை யோதிமத்திற் களித்தகலந் தனையளித்தாய் வனச
மேலோட்
கின்னமளித் தாய்பலவு மின்னலுமின் றளித்தாயா லென்னே
யென்னே.

:— மு. வேங்கடசாமி நாட்டார்,
திருச்சி S.P.G. கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

இருட்குழியாம் பிறந்தையினின் றெவருமோர்ந் திடவுய்வா
னெண்ணி ஞானத்
தெருட்பேரொலியுஞ் சைவமஞ் சரியளித்த தன்றிநலந் திகழ்கல்
லூரி
யருட்பெருகும் புத்தகசா லையுமமைத்த சற்குணனே யவனி
தன்னில்
வெருட்சியினிற் புகழதனை யிருத்தியெங் ஙனமகன்றுய் விள்ளு
வாயால்.

:— மோசூர். முனிசாமி முதலியார்,

மன்னவநீ தமிழ்ச்சங்கம் வளரவொன்பான் வருடவிழா
வயங்கத் தஞ்சை
தன்னினடத் தியஞான்று தென்னவன்பெண் சென்னிக்கே
தகுதி யென்று
பன்னித்தான் வளர்த்ததமிழ்க் கன்னியையித் தஞ்சையிலே
பரிவா யீந்தே
னின்னுமெற்குப் பாத்தியமு மிலையெனச்சொற் பலித்ததோ
வேந்தா லேந்தால்.

:— முருகையக் கவிராயர்.

மண்ணாட்டுப் புலவர்சங்கந் தொறுமுன்னை யழைத்ததி பனுக்கு
மாண்பால்
விண்ணாட்டுப் புலவர்சங்க வதிபதியாய் விளங்கவிவண்
விழைந்தா ரென்றே
வுண்ணாட்டு மீகைகுண மொழுக்கமெலா முருவெடுத்திங் குற்றாற்
போன்ற
பண்ணாட்டு மொழியுறுபாண் டித்துரையாம் பார்த்திபனே
பார்நீத் தாயே.

:— வி. சாமிநாத பிள்ளை,
செயலர், தஞ்சைக் கருந்திட்டைக்குடி,
வித்யா நிகேதன சபை.

மன்னவர் திலகராந் தென்னவர் குலத்தர்
முன்னுற வளர்த்த தொன்மொழி யரசா
யெம்மொழி யினுமிக வினிமைமிக் குடைய
தென்மொழி யாய செந்தமிழ்க் கன்னி
தன்னிலை கலங்கித் தளர்வுறுங் காலையத்
தென்னவர் குலப்பேர் மன்னுரிமை மருவ
முத்தமிழ்ச் சங்கமா முச்சங் கப்பெய
ரித்தமி ழுலகி லியல்பெற மாற்றி

நாற்சங் கப்பெயர் நிலவுற நாட்டியத்
தமிழிளங் கன்னியை யியன்மணங் கமழ
வளர்த்துப் பருவம் வயங்க நோக்கிப்
பெருமுடி சூட்ட வருமம யந்தனி
லவளைத் தனிவைத் தமரர்நா டுகந்து
பாண்டித் துரைமன் பாண்டித் துரைம
னீண்டெமைப் பிரிந்தவ ணேகுந் தன்மையை
யென்னென் றுரைக்கேம் யாரொடு நோகேம்
பன்னருங் குறைத்திப் பாருல குக்கே.

:— சி. அ. சி. காசிநாதன் செட்டியார்,
கொத்தமங்கலம்.

1. பணம்படைத்த சிலருடற்குப் பட்டுடுத்திக் கலனணிந்து
பார்த்துத் தம்மேன்
மணம்படைத்த வாசனைக ளூறத்தடவி வாணாள்வீண்
மாய்ப்பர் மாதோ
குணம்படைத்த துரையேநீ மெய்யுணர்ச்சி யினைப்படைத்திக்
குவல யத்திற்
கணம்படைத்த தமிழ்வளர்த்தாய் கண்பெற்றுன் மீண்டிழந்த
காதை கொல்லோ.

2. சொன்னாலும் வாய்மணக்குங் கேட்டாலுஞ் செவியினிக்குந்
துரையே நின்பா
தன்னாலு நினைந்தாலு மனமணக்குந் தமிழ்மணந்து தழைக்கச்
செய்த
மன்னாவிந் நிலவுலக முலையிழக்க வந்தபெருங் குறைவை
யத்தே
பன்னுவாற் புலவர்பலர் பாப்புனைந்து தங்கருத்தைப் பரப்ப
லொன்றே.

நா. சா. பாங்க். நா. இராமசாமிப் பிள்ளை

அடுத்தவர்கள் மிடித்துயரைக் கெடுத்துய்ய நன்னிதிய மள்ளி
யள்ளிக்
கொடுத்தவர்கள் குடிகாக்குங் குணக்குன்றே தமிழ்வளர்க்குங்
கொண்ட லேநீ
யெடுத்ததமிழ்ச் சங்கமும்பல் லங்கமுஞ்செந் தமிழ்ப்புலவ
ரினமும் வாட
விடுத்திரக்க மின்றியெங்குச் சென்றனைபாண் டித்துரைப்பேர்
வேந்தர் வேந்தே.

:— சுந்தரேசுவரையர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்
சேதுபதிசெந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்.

வேண்டும் பொருள்கள் வேண்டியவர் வேண்டியாங்கே
விரைந்த ளித்துச்
சேண்டங் கெழிலி தனைப்பார்த்துச் சிரிக்குஞ் செங்கை
யிரண்டுடையா
யீண்டு நமக்கோ ரலுவலிலை யினியென் றேயோ பிறிதொன்றே
நீண்ட சடையார் நிமலன்பா னீயே கினது மொழிவாயே.

:— பண்டிதர் அ. கோபாலஅய்யர்,

பூவுலகிற் கலைமகளும் பூமகளும் மோரிடத்திற் பொருந்தி
வாழ்தல்
நாவலர்க ளரிதெனவே நவில்வரது பொய்யாக நாங்கள் காணப்
பாவலர்க்குப் பாவலனய்ப் பாவலனத் தம்புரந்த பான்மை
யாலே
காவலர்க்குக் காவலனய்க் கவினியபாண் டித்துரைநிற் காண்கு
வோமோ.

:—பாலபண்டிதர். சு. அரிகரஅய்யர்,
சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை ஆசிரியர்.

பத்திநெறி யிதுவென்று பலமுறையும் பிரசங்கம் பகர்வா
யெங்கே
சித்தசன்போ லுலவுதிரு மேனியெங்கே கார்நிகருஞ் செங்கை
யெங்கே
யத்தனுறை கோயிறெருஞ் சலியாம லேகுதிரு வடியெங்
கேயோ
எத்திசையும் புகழ்நிறுவு முக்கிரபாண் டித்துரையெம் மிசைவல்
லோனே.

:— ப. முத்துச்சாமிக் கவுண்டர்,
அமெரிக்கன் மிசன் உயர்பள்ளி ஆசிரியர்.

மனமுருகக் கல்லுருக மரமுருகச் சிறுகுதலை மதலை யாருந்
தினமுருகக் கவிவாணர் நினதுதிறந் தெரிந்துருகத் திசைக
டோறுஞ்
சனமுருக நீயொளித்த விடமறியோ மென்செய்வோஞ் சாற்றாய்
சாற்றாய்
வனமுருக னிகர்பாண்டித் துரையேயெவ் வுயிர்க்குமருள் வள்ளி
யோயே.

:— ரெ. இராமமூர்த்தி ஐய்யர்.
சொக்கலிங்கப்புத்தூர்க் கலாசாலை ஆசிரியர்.

அன்னையென் றுனையழைக்கு மாதுலர்க ளின்றுமுத லாரைப்
பார்த்துப்
பொன்னீவாய் பொருளீவாய் புவியீவாய் புகழ்பெறுநற் போத
மீவாய்
பன்னூலின் றிரட்டீவா யுண்டியுடை யீவையெனப் பகர்வார்
வள்ளால்
மன்னேபாண் டித்துரையே வான்புலவ ரவாத்தீர்ப்பான்
மனம்வைத் தாயோ.

தி. சீனிவாசஅய்யங்கார்.
புதுக்கோட்டை அரசர் கலாசாலை ஆசிரியர்.

கன்னன்மொழிக் குருகுவமோ கலைநலத்திற் குருகுவமோ கற்றோர்
போற்றுந்
தென்னன்மொழி வளர்சங்கச் சிறப்புநினைந் துருகுவமோ
சீமா னேநீ
பன்னருஞ்சீர் வாய்ந்ததமிழ் வளர்த்ததற்கா வுருகுவமோ
பாராள் வேந்தே
யென்னநினைந் ததெற்கிரங்கி யிருநிலத்தில் யாந்தளர்வே
மிசைத்தி டாயே.

:— புன்னைவன முதலியார்,
அழகன்குளம் கலாசாலை ஆசிரியர்.

இத்தரையிற் றமிழோங்க வெழிலாருஞ் சித்தாந்த சைவ மோங்க
வுத்தமர்கள் குலமோங்க வொண்புலவர் தனியோங்க வொளிசேர்
நீறும்
பத்தியுறு கண்டிகையு மணிந்துவிதிப் படிபூசை பண்ணி யிந்நா
ளத்தியுரி யரனடியை யடைந்தனைபாண் டித்துரையே
யருட்கோ மானே.

:— கந்தசாமியார்.

சேதுபதி யரசர்குலக் கடற்றோன்றிச் செத்தமிழாங் கடலி னீந்தி
நீதிதெரி பெரியோர்சூழ் தமிழ்ச்சங்க மொன்றுகண்ட நிருப
னெங்கட்
காதரவா கியபாண்டித் துரைச்சாமி வானடைந்தா னன்னை
நீங்க
வேதமுறுங் கன்றுகள்போல் வருந்துகின்றோ மினியாங்க
ளென்செய் வோமே.

:— திரு இராமானுசையங்கார்.

சீராம கதையமிர்துஞ் சிறப்புறுமின் னுரையமிர்துஞ் சேர்ந்த
வாயுங்

காராருங் கொடைக்கரமு மடைதிறந்தா லொத்தவருட் கமலக்
கண்ணும்
வாராருந் தனமடவார் மடலெழுது வனப்புமதி மாண்பு மென்று
பாராரு மக்களுள்யா ரிடைக்காண்பாம் பாண்டியனே
பகரு வாயே.

:— ஆ. கார்மேகக் கோனார்.

மதியிழந்தோம் மதியிழந்தோம் அந்தோநம் மதுரைநகர்
மன்னு சங்கப்
பதியிழந்தோம் பதியிழந்தோம் தமிழ்மகடன் புகலிட மாய்ப் பற்றி
நின்ற
கதியிழந்தோம் கதியிழந்தோம் எழிற்பாண்டித் துரையென்னுங்
கண்ணே யெங்கள்
நிதியிழந்தோம் நிதியிழந்தோம் நினையிழந்தோ மல்லோம்யாம்
நினைக்குங் காலே.

:— T. S. நடராச அய்யர்,
சேலம் கல்லூரித் தமிழாசிரியர்.

1. திருநிறைந்த மாமதுரைப் புகழ்வேந்த
ராதரிப்பத் திரண்டு பூத்திங்
குருவளர்ந்த தமிழ்மடந்தை யந்நாள்போ
லிந்நாளு முயர்வுற் றோங்கப்
புரைதவிர்ந்த கழகமொடு சங்கமுத
ருபித்துப் புரந்த பாண்டித்
துரைகரந்து விண்புகவே புவிமகள்போய்த்
துயர்க்கடலிற் றோய்கின் றாளே.

2. என்னபவ மிழைத்ததுகொ லிப்பெரிய
தமிழகந்தா னிமையோர் வாழும்
பொன்னகர்முன் செய்ததவம் மிகப்பெரிதோ
புவனமிசைப் பொலிவில் லானைக்

கன்னலன மொழியானைக் கற்பகத்தின்
கொடையானைக் கலைவல் லானைப்
பன்னரிய புகழ்ப்பாண்டித் துரையரசை
யிழந்துபடும் பரிவே தையோ.

:— ச. பூபாலபிள்ளை,
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்

கோவாகி யங்கும் புலவோரைச் சங்கநீ கூட்டுதற்கோ
மூவா முதல்வன் றிருவால வாயுடை முன்னவன்ற
னேவா லினிய தமிழ்ப்பரி பாலிக்க வெய்தியதோர்
தேவா புகலுதி யிச்சங்கம் விட்டுவிண் சென்றதுவே.

:— சி. கணேசஅய்யர்.

1. இளமையிற்செந் தமிழ்சைவ சித்தாந்த
மாதியெலா மினிது தேர்ந்து
வளமைமிகு கம்பரா மாயணநுட்
பங்களெலாம் வயதீ ரேழிற்
றெளிவுபெறப் பலர்மகிழப் பிரசங்கஞ்
செய்திடுநற் றிறமை வாய்ந்து
''விளைபயிரி னியன்முளையில் விளங்கு''மெனு
முதுமொழியை மெய்ப்பித் தாயே.

2. பொய்யாத மொழிப்புலவன் புகன்றுஞ்சாட்
சியந்தந்தும் புகழ்மா றன்முன்
செய்யாத தென்மதுரைத் தமிழ்ச்சங்கத்
தாபனநீ செய்தாய் மெய்யா
ரையா நான் 'மறைகளினிந் தனைசைவ
நிந்தனைக' ளாற்று நெஞ்சத்
துய்யாநின் னல்லிசையுஞ் சங்கமும்பல்
லூழிநனி துலங்கி வாழி.

:— ம. கோபாலகிருட்டிணஅய்யர்.
மதுரைக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர்.

ஊருணியும் பயன்மரமு முண்ணீருங் கனிகளுமே யுதவ
முன்போற்
பேருணவு மாடைகளும் பெரும்பரிசுந் தந்திடுமோ பேசுங்
கானீ
சீரணவு மதுரையிலோர் செய்யுடைய வறிஞனதைத் திருத்து
மாறு
பேரணவு தமிழ்ச்சங்கந் திருத்திவளர்த் தனைமறத்தல் பிழையே
யையா.

:— வே. முத்துச்சாமி அய்யர், பி. ஏ., எல். டி.

நறையொழுகத் தமிழ்பருகுந் திருவாயாய் கனிந்தசொல்லாய்
நாவ லோர்தங்
குறையொழுகத் தருகரத்தாய் மதுரையிற்சங் கத்தரசே குலவுந்
திங்கட்
பிறைநழுவப் புனலொழுகச் சடையாடப் பொதுவினடம்
பிறங்கச் செய்யு
மிறைகழற்கோ வினிதடைந்தா யரைநாளிற் றவம்பலித்தா
லிகழ்வார் யாரே.

:— சுப்பராய செட்டியார்.

காற்றிரட்டத் திரைபுரட்டுங் கடலிணையச் சுராசுரராற்
கடைந்தே பண்டு
மாற்றிரட்டு மமுதுதமிழ் மாக்கடலி னீயெடுத்து வழங்குஞ்
சீர்ப்பன்
னூற்றிரட்டுக் கிணையாமோ நுவல்சைவ மஞ்சரியை
நோக்குங் காலைப்
பாற்றிரட்டுங் கைத்திடுமே பார்வேந்தே சென்றவிடம் பகரொ
ணாதே.

:— மு. தண்டாயுதபாணிக் காடவராயர்

1. நீர்சொரியாக் கண்ணில்லை யழன்மெழுகா யுருகாத நெஞ்ச
மில்லை
பேர்தெரியாப் புலவரில்லை பாவலிக்கா வாயுமில்லை பெரிதுன்
சீர்த்தி
நேர்பெறுமுன் வயதுகொஞ்சந் தமிழ்க்குதவ நினைந்ததெலாம்
நேரா முன்னே
சீர்பெறுமித் தமிழகத்தை யழகழித்த கொடுவிதிக்கென்
செய்தே மையா.
2. ஆங்கிலங்கற் றிடுஞ்சிறுவர் தாய்மொழியி னபிமான
மடையாக் கேடு
நீங்கவொரு பரீக்கைவைத்துப் பரிசீந்தாய் வானகத்து
நிலவுந் தேவர்க்
காங்குமொரு பரீக்கைவைத்துத் தமிழ்ச்சுவையூட் டிடவசதி
யறியத் தானே
ஓங்குபுகழ் மேவியபாண் டித்துரையே நீவான்சென் றுற்ற
தென்னே.

:— அனவரத நஞ்சையபிள்ளை,
தாராமங்கலம்.

பாண்டித் துரையே பாரரசே பாரி லெவருமேன்மைபெற
வேண்டித் தருவாத் தமிழ்ச்சங்கம் விளங்க வைத்த தூயோனே
மீண்டித் தமிழை வளர்ப்பதற்கு மேலா யோர்ந்து
பொருள்கொணரப்
பூண்ட வன்பாற் பொன்னுலகு போந்தாய் போலு
மெங்கோவே.

:— கோ. செல்லமையங்கார்.

சீர்பெறு செந்தமிழ் சிறப்புற் றோங்கப்
பார்புகழ் மதுரைப் பதியினிற் பதித்த
சங்கப் பெருமை தரணியோர் போற்ற
வெங்கும் பரவி யியங்கு மதனுன்

XX . A . 18(2)



மதியிற் சிறந்து மாண்பொரு ளுணர்ந்து
பொதிய வரையிற் பொருந்திய புகழோ
னென்ன விருந்தீண் டியற்றமிழ் விளக்கினை
நன்னய மொழியிலா நாயினுங் கடையா
மென்போ லியர்க ளெவரையு மெளிதிற்
றன்போ லுயர்த்தத் தழைத்திடு மன்பு
திரையுடை வாரி சிறிதெனும் படிவளர்
துரையே பாண்டித் துரையுனை யிழந்த
வாற்றுத லில்லா வரும்பிணி
மாற்றுதற் கொன்று மருந்தறிந் திலனே.

:— தா. மாணிக்கவாசகம் பிள்ளை,
புறக்கை.

1. சேவார்ந்த கொடியண்ண றிருவடியே
பொருளாகச் சிந்தித் தென்றுந்
தாவாத தமிழ்மொழியுஞ் சைவநெறி
யும்வளர்த்த தன்மை யாலே
மூவாத தமிழ்மறைசொன் மூவரோ
வாசகஞ்சொன் முனியோ வென்னப்
பாவாணர் புகழ்பாண்டித் துரையரசே
நினைப்பிரியும் பவந்தா னென்னே.

2. அவஞான மகற்றுமுயர் சிவஞான
பாடியத்தை யகத்துட் கொண்டு
பவஞான மறமாற்றும் பண்பார்பாண்
டித்துரையே பார்மீ தென்றுந்
தவமேதுஞ் செய்யாத தாழ்வுடையே
னீடேறுந் தன்மை நோக்கிச்
சிவஞான மெனவழைக்குந் திருவாக்கைக்
கேளாது திகைக்கின் றேனே.

:— சிவஞானம் பிள்ளை,

# சாவாவுடம்பு

இப்பொழுதும், முச்சங்கவாயிலான் முத்தமிழ் புரந்த மெச்சுபுகழ்ப் பாண்டியர்த மெச்சமென்றுரைக்கவு மிப்புவிமீதில் நந்தமிழ் மக்கள் செய்த நற்றவமெனவும் வந்தவதரித்து, நந்தமிழ் மொழியானது தனதருமையும் பெருமையும்போய்ப், படிப்பாருங் கேட்பாரும் பரிபாலிப்பாருமின்றிக் குறைவுறுந் தன்மைகண்டு, நந்தமிழ் மக்கள் நலம்பெற்றுய்யவோ ரொண்டமிழ்ப் புலவர் சங் கத்தைத் திருவாலவாயென்று செப்பு மதுரைமா நகரின்கண்ணே நிறீஇத், தாம் ''குடிப்பிறப்புடுத்துப் பனுவல்சூடி - விழுப்பேரொ ழுக்கம் பூண்டு காமுறவாய்மைவாய் மடுத்து மாந்தித்தூய்மை யிற்-காத லின்பத்துத் தூங்கித் தீதறு - நடுநிலை நெடுகர் வைகி வைகலு-மழுக்காறின்மை யவாவின் மையென - விருபெருநிதி யமு மொருதா மீட்டுந் - தோலா நாவின் மேலோர் பேரவை'' யாகியவதனுடன் ஒருநாளன்றிப் பலநாளிருக்கை பெற்று அக்கி ராசனராக விளங்கித் தொல்காப்பியனர் ''எட்டுவகை நுதலிய அவையத்தானும்'' எனக்கூறிய புறப்பொருட்டுறைக்கிலக் காகியும், தமிழ்ச்சங்க முத்திராசாலையெனஓர் அச்சியந்திரசாலையை வைத்து முகுந்தனுதவிய முந்தமிழ்தன்ன ''செந்தமிழ்ப்'' பத்திரிகையையுஞ் செந்நாப் புலவரின் செம்பொருளமைந்த பல்வகை விஷயங்களோடு வெளிவரச் செய்தும். பழைய பலநூலு ரைகளைத் திருத்தியச்சிட்டு வெளிப்படுத்தியும், பாலர்கள் தமிழ் நூல்களைக்கற்றுத் தேறுமாறு சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை யென்னும் பெயரோடு ஒருவித்தியாசாலையைத் தாபனஞ் செய்தும்; பழைய நூலுரைகளைத் திருத்தியும், புதிதாகவியற்றியும், அச்சிடும் புலவர்களுக்கும், தம்மேற் பாமாலைசூட்டும் புலவர்களுக்கும் ஒண்பொருளீந்து தொல்காப்பியனர் கூறிய ''இடையில் வண் புகழ்க் கொடைமையானும்'' என்னும் புறப்பொருட்டுறைக்கும் இலக்காகியுமிவ்வாறே பல்லாற்றானும் நந்தமிழ் நாட்டைப் பரி பாலித்துச் சிறப்புறச் செய்துவந்து சென்ற கார்த்திகைமீ களம் திகதியிலன்று பரகதியடைந்தவராகிய பாலவனத்தம் ஜமீந்தார்

ஸ்ரீ மாந். பொ. பாண்டித்துரைத்தேவரும் சாவாவுடம்பாகிய வான்புகழை யெய்தினரேயாவர்.

சி. கணேசையர்

—●—

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் பலகையுந் தழைத்தினி தோங்கு
மங்கலப் பாண்டி வளநாடு."

எனப் பல ஆன்ருேர்களாற் சிறப்பித்துக் கூறப்படும் பாண்டிய நாட்டின் றலைமை நகராகிய மதுரையம்பதியிற் பல்லாண்டுகளாகப் பாண்டியர்களால் ஆதரிக்கப்பெற்ற முச்சங்கங்கள்போற் றமிழகஞ்செய்த தவப்பயனுற் றம்பெயர்க்கேற்ப நான்காம் சங்கமொன்றை நிறுவி அக்சங்கத்தின் அக்கிராசனுதிபதியாய் வீற்றிருந்த பெருந்தகை வள்ளலும், கல்விக்கடலின் கரைகண்ட கருந்தனமும், கல்லுங் கனியும்படி இனிமைபெறப் பேசுந்திறனுற் சபையிலுள்ளோரனை வரையும் பிணிக்கத்தக்க பேராண்மைச் சிங்கமும், சிவபக்தியிற் சிறந்த சீமானும், இரப்போர்க்கினி தளிச்கு மெழிற் கொடையாளியும் அழகிய வடிவம் அமையப் பெற்றவரும், தனிப்பாடற்றிரட்டினைத் தமிழுலகிற்குதவிக்கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த இராமநாதபுர மன்னரிடத்து மதிமந்திரியாய் விளங்கிய பொன்னுச்சாமித்தேவரவர்களின் தனிப்புதல்வரும் கலிகாலக் கன்னுவதாரனென்னக் கடலுலகிற்புகழ்வாய்ந்த கல்விக் களஞ்சியமாம் பாஸ்கர சேதுபதி மன்னரின் கண்ணனைய சகோதரரும், 'மகனறிவு தந்தை யறிவு, என்னும் அறமொழிக் கேற்பப் பன்னூற்றிரட்டு வெளியிட்ட பாவலரும், சைவர்க்குச் சைவமஞ்சரி தந்தருளிய சைவசிகாமணியும், பாலவனத்த மென்னும் பதியின் தலைவரும், என்றென்றைக்குமழியாத புகழுடம்பை இந்நிலவுலகில் நிலைநிறுத்தி நிலையிலாப் பொய்யுடலை நீத்த பெரும் புண்ணியமே திருவுருவாக் கொண்ட மக்களிற் சிறந்தோங்கிய வருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்

களின் தேகவியோகத்தானேர்ந்த ஆருத கழிபெருந்துயரத்தைச், சேலநகர்த் தமிழபிமானிகளாகிய யாங்கள் அனைவரும் இவ்வநுதாபக் கடித வாயிலாய் அதிக வருத்தத்துடன் அறிவிக்கின்றேம். ஆறுதலைக்கொண்ட ஈசன் நம்மெல்லோர்க்கும் ஆறுதலை அளிப்பாராக.

இங்ஙனம்,
துரையின் பிரிவிற்கிரங்கும்,
**சேலநகர்த் தமிழபிமானிகள்.**

இராமநாதபுரத்து அரசர்

# திரு. ஆர். சண்முகராசேசுவரசேதுபதி



தோற்றம்: 1909.

மறைவு: 4—3—1967

# அரசர் மறைவு

நம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், இராம நாதபுரத்து அரசருமாகிய திரு. ஆர். சண்முகராசேசுவரசேதுபதியவர்கள் 4—3—1967–இல், தம் 58–ஆம் வயதில் இறைவன் திருவடி நீழல் அடைந்தார் என்னும் செய்தி, தமிழ்ப் பெருமக்களைக் கலங்கச் செய்யும் துயர நிகழ்ச்சியாகும்.

அரசரவர்கள் 1909-இல் பிறந்தார். இராமநாதபுரம் அரசர் உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரியிலும் கல்விபயின்றார். 1949-இல், காங்கிரசில் சேர்ந்தார். சென்னைச் சட்ட மன்றத்தில், நிலச் சுவான்கள் தொகுதி உறுப்பினராக 1947—52-இல் இருந்தார்.

1952–இல் நடந்த முதல் பொதுத் தேர்தலில், சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரவர்கள் மந்திரி சபையிலும், காமராசரவர்கள் மந்திரிசபையிலும், அமைச்சராக இருந்து பணிபுரிந்துள்ளார்.

அரசர் அவர்கள், இருதய நோய் காரணமாகச் சென்னைப் பெரிய மருத்துவமனையிற் சேர்க்கப்பெற்றார். உடல் நலம் பெற்று நம்மிடையே வந்து, முன்போல் நற்பணிபுரிவார்கள் என நம்பியிருந்தோம். அந்தோ! காலன் என்னும் கண்ணிலி, அருமந்த உயிரைக் கவர்ந்துகொண்டனன்!

அரசர்தம் நல்லுடல் சென்னையினின்றும் இராம நாதபுரத்திற்குக் கொண்டுவரப்பட்டது.பத்தாயிரவர்க்கு

மேலான ஆண்களும், பெண்களும், கண்ணீர் சொரிய இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர் தமிழ் நாடு ஆளுநரின் சார்பாக மலர்மாலை அணிவிக்கப்பெற்றது. இராமநாதபுரம், இராமேசுவரம், சிவகங்கை முதலான தேவத்தானங்கள் சார்பிலும், மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பிலும், தென் இந்தியாவிலுள்ள பல மடங்கள் சார்பிலும் மரியாதைகள் செய்யப்பட்டன.

அரசரவர்களின் மறைவு, ஈடுசெய்ய முடியாப் பேரிழப்பாகும். அவர்களை இழந்து, வருந்தி நிற்கும் அவர்தம் மனைவி, மக்கள். உறவினர் அனைவர்க்கும் எம் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அரசரின் நல்லுயிர் எல்லாம் வல்ல இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்கவும் வேண்டுகின்றோம்.

# இயல் மாநாட்டுத் திறப்புரை

—*—

இராமநாதபுரத்தரசர் திரு. ரா. சண்முகராசேசுவரசேதுபதியவர்கள்

குறிப்பு :- 1-8 42 இல் மதுரையில் நடந்த முத்தமிழ் மாநாட்டின்போது முதல்நாள்நடைபெற்ற இயற்பகுதியைத் திறந்து வைத்த போது ஆற்றிய உரை,

தமிழன்பர்களே!

இவ்வியற்றமிழ் மாநாட்டைத் திறந்து வைக்கு முன், இப் பணியை எனக் களித்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு, யான் கருதும் சில வற்றை ஈண்டெடுத் துரைக்க விரும்புகிறேன்.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழி, வேறொரு மொழியினின்று கிளைத்ததாகாது தனக்கேயுரிய தனிச் சொற்களும் பிற பண்புகளும் கொண்ட தனி நிலையுடையதென்பது அறிஞர் கண்ட துணிபு. 'தமிழ்' என்னும் சொற்கு இனிமையென்பது பொருளென்பதும், அவ்வினிமையுடைமை பற்றியே இம்மொழி இப்பெயர் பெற்றதென்பதும் இதன் சிறப்பை நன்கு விளக்கும். ''யாமறிந்தமொழிகளிலே தமிழ்மொழிபோலினிதாவதெங்கும் காணோம்'' என்பது பாரதியார் வாக்கு. இம்மொழி இப்பொழுது வழங்கும் நிலவெல்லைக்கப்பாலும் பண்டு பரவிக் கிடந்ததென்றும், சரித்திர வாராய்ச்சிக்கெட்டாத மிக நீண்டகாலந் தொட்டுப் பரதகண்டத்தின் தென் பகுதியில் வழங்கும் பழைமை வாய்ந்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவ்வாறு தொன்று தொட்டு இன்று வரை நின்று நிலவும் பெருமை படைத்த இம்மொழி, இயற்றமிழ், இசைத்தமிழ் நாடகத்தமிழ் என மூவகைப்படுத்து ''முத்தமிழ்'' என்று முற்கால முதல் வழங்கப்பட்டு வருகின்றது. இங்ஙனம் வழங்கப்படுவதும், இம் மூன்றற்கும் தனித்தனியாகவன்றியும் தொகுதியாகவும்

இலக்கணம் வகுக்கப்பெற்றிருப்பதும் இம்மொழிக்கே சிறப்பாக வுரியன என்பர்.

இம்மூன்றும் தமிழினுள், இயற்றமிழாவது, யாவரும் தம்முள்ளக் கருத்தை வெளியிடுவதற்குக் கருவியாய், உலகவழக்கிலும் நூல் வழக்கிலும் வசனமும் செய்யுளுமாய் இயலும் தமிழ். அவ்வியற் றமிழ் இசையோடு கூட்டித் தாளமறுத்துப் பாடப்படுவழி இசைத் தமிழாம். அவ்விசை தாளங்களோடு அபிநயமும் கூடியவழி நாடகத்தமிழாம்.

இயற்றமிழ் மனத்தைப் பற்றியது. இசை அத்துடன் இன் னோசை தழுவியது; நாடகம் அவற்றுடன் மெய்யினியக்கம் கூடி யது என்பர் ஆன்றோர். எனவே, இயற்றமிழ், கரணங்கள் மூன்றனுள் முதலாவதான மனத்தைமுக்கியமாகப்பற்றியதென்பது புலனும். இவ்வாற்ருல், இயற்றமிழ்முன்னேதோன்றியதாவதோடு, ஏனையிரண்டு தமிழுக்கும் அடிப்படையாயும் நிற்றல் உணரப்படும். இக்காரணம் பற்றியே, முத்தமிழுள் இது முன்னிற்பதாயிற்று என்பர். மனவுணர்ச்சியின் சிறப்பும், உணர்ந்ததைச் சொல்லால் உணர்த்தும் வன்மையும் மக்கட் பிறவிக்கு ஏனையவற்றிலும் ஏற்றம் தருவனவாம். அங்ஙனம் உணர்தற்கும், உணர்ந்ததைப் பிறருக்கு உணர்த்துதற்கும் கருவி மொழியாகும். சமூக வாழ்க் கையையுடைய மக்கட்கு மொழி எத்துணை அவசியமானதென்ப தும் அம்மொழியால் அவரடையும் பயனும் இங்கு அதிகமாகயான் விரித்துரைத்தல் வேண்டுவனவல்ல. நம்மொழியில் அந்நிலையில் நிற்பது இயற்றமிழாதல் வெள்ளிடைமலை இவ்வியற்றமிழ், இசை நாடங்களிற் கலத்தல் மேலே கூறப்பட்டது. இசைத்தமி ழில் வரும் பாட்டும், நாடகத் தமிழில் வரும் பாட்டும், உரையில் இயற்றமிழ்ச் சொற்கொண்டே யாதலின் அங்ஙனம் கூறப்படுவ தாயிற்று. எனவே அவ்விசை நாடகங்களுக்குக் கவிசெய்வோன் அவ்விரண்டு தமிழுடன் இயற்றமிழும் வல்லவனுக விருத்தல் வேண்டும். அன்றியும், அவ்விசை நாடகத் தமிழ் கூறும் நூல்

களும் இயற்றமிழே. அப்பெயர்களும் இயற்றமிழேயாம். தமிழ் என்பது பொதுவாக மூன்று தமிழையும் அடக்கி நிற்பினும், சிறப்பாக இயற்றமிழையே குறித்து நிற்கும். இவ்வாற்றால், இயற்றமிழ் ஏனையிரண்டு தமிழினும் சிறந்து தனித்தும், அவற்றின் உயிரே போலக் கலந்தும்நிற்கும் தன்மையையுடையது என்பதை உணரலாம்.

இவ்வியற்றமிழ் எழுத்தும், சொல்லும், பொருளுமென்று மூன்று பகுதிகளை யுடையது. இம் மூன்றிலக்கணத்தோடு யாப்பிலக்கணத்தை வேருகக்கூட்டி நான்கென்றும், அணியிலக்கணத்தை அவ்வாறு கூட்டி ஐந்தென்றும் வழங்குவதுமுண்டு. சங்க காலத்தும். அதனையடுத்தும், பிற்காலத்தும் தோன்றிய தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்களும், எட்டுத்தொகை முதலியனவும், ஐம்பெருங் காப்பியங்களும், கம்பராமாயாணம் முதலியனவும், பல வகைப் பிரபந்தங்களும், பல்வேறு உரைநடைகளும், அவைபோன்ற பிறவும் இவ்வியற்றமிழ் நூல்களாம்.

இனி. இவ்வியற்றமிழ் பண்டு பல துறைகளிலும்வளர்க்கப்பட்டு உயர்நிலை யெய்தியிருந்தவாறும், இப்பொழுதும் அதன் வளர்ச்சி குறித்து நாம் செய்ய வேண்டுவனவும் ஒருவாறு கூறப்படும். அதனை வளர்த்தற்குரிய நெறிகளை ஆராய்வதே இம்மாநாட்டின் நோக்கமாகும். அவ்வழி, முன்னர் நிலைமையைச் சிறிது மொழிதல் முறைமையேயாம். ஏனெனில் ‘மறைவாக நமக்குள்ளேபழங்கதைகள்சொல்வதிலோர்மகிமையில்லை’ (பாரதியார்) யாயினும், முன்னேற்றம் கருதிமுயலுங்கால் முன்னிலையையறிந்து கொள்ளுதல் அம் முன்னேற்றித்திற்குத் துணையா மாதலின், அப்பொழுது அதனைப் பேசுதல் பழங்கதைபேசுதலாய்க் குறையாகாதாதலால் என்க.

பண்டைக் காலத்தில் நம் தமிழகத்தில் வாழ்ந்த பல்வேறு பாவலரும், காவலரும் யாவரும் இத்தமிழ் வளர்ச்சிக்காகப்பெருந் தொண்டு செய்து, பெயர் பொறித்து வைத்திருக்கின்றனர்.

செந்தமிழ் முனிவன் என்று சிறப்பிக்கப்பெற்ற அகத்தியன் சிவபெருமானிடத்துத் தமிழ் கற்றுத் தென்னுடு வந்தான் என்னும் செய்தி அறிஞரனைவரும் அறிந்தது. வேறு பிறரிடம் அவன் தமிழ்கற்ருனென்றுகூறுவாருமுளராயினும், அது பற்றிய ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டாததே. அவன் தமிழ் கற்றுத் தென்னுட்டில் பொதியின்மலையிலிருந்து தமிழிலக்கணம்செய்ததில்மதபேதமில்லை. அவன் வருகைக்கு முன்பே தென்னுட்டில் தமிழ் சிறந்திருந்த தென்றும், பின் அவன் அந்நிலத்து உலகவழக்கையும் நூல்வழக்கையும் ஆராய்ந்து புத்திலக்கணம் வகுத்தான் என்றும் ஆன்ருேர் கூறுவர்.

ஒரு மொழியின் வளர்ச்சி அம்மொழி வழங்கும் நிலத்து மக்களின் நாகரிக வளர்ச்சியை நன்கு காட்டும். ஏனெனில், நாகரிக வளர்ச்சியுடைய மக்கள் மொழியே நன்கு வளர்ந்திருக்குமாதலால் என்க. அகத்தியன் தமிழ் நிலத்தின் இருவகை வழக்கையும் ஆராய்ந்து நூலியற்றினுன் என்றதனுல், அவ்வகத்தியன் வருகைக்கு முன்னதாகிய பழமைமிக்க காலத்திலேயே தமிழ் மக்கள் நாகரிக வளர்ச்சியுடையவராய்த் தம்மொழியை இரு வழக்கினும் நன்கு வளர்த்து வந்திருக்கின்றனரென்பது புலனும். இங்ஙனமாகவே, நாம் நம்மொழியாகிய இம்மொழியை இன்று குன்ற விடுவோமாயின், அது நமது நாகரிகம் குன்றிய நிலையையே தெளிவாக விளக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமுண்டோ? அகத்தியமுனிவன் தனக்குமுன்புள்ள உலகவழக்கையும் நூல்வழக்கையும் ஆராய்ந்து, இரண்டன் அமைதிகளும் தழுவி இலக்கணம் வகுத்தான் என்றதனுலும், தொல்காப்பியன் முதலிய பிறரும் இவ்வாறே வகுத்தனர் என்பதனுலும், இருவகை வழக்கையுந்தழுவிக் குறைவின்றி மொழியை வளர்த்தல் வேண்டும் என்பதனை உணரலாம். நூல்வழக்கொன்றையே கருதினும் உலக வழக்கொன்றையே தழுவினும் மொழி வளர்ச்சியடையாது. நூல் வழக்கிலின்றி உலக வழக்களவே யொழிந்த மொழிகளும், அவற்றிற்கு மாருக உலக வழக்கிலொழிந்து நூல் வளக்களவே நின்ற மொழிகளும்

உண்மை அறிஞர் பலரும் அறிந்ததே.

இன்னும், இவ்வகத்திய முனிவன் இலக்கண நூலோடு மருத்துவம் முதலிய பிறவகையான பல நூல்களும் இயற்றினன் என்றும், தொல்காப்பியன் முதலான மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தான் என்றும், சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தான் என்றும் கூறுகின்றனர். தாம் வல்ல துறைகளிலெல்லாம் நூலியற்றுதல் மாணவர்க்குக் கற்பித்தல், புலவர் குழுவிடையிருந்து மொழி வளர்ச்சிக்குரியவற்றை ஆராய்தல் ஆகியவையெல்லாம் மொழி வளர்க்கும் முறைகளாமன்றோ.

அகத்திய முனிவனிடத்தில் இயற்றமிழுணர்ந்த மாணாக்கர் தொல்காப்பியன் முதலிய பன்னிருவர் என்பர். அவர்கள் தாம் தமிழ் கற்றளவில் நின்றுவிடாமல், தனித்தனியாகவும் சேர்ந்தும் இலக்கணங்கள் செய்து தமிழ்த்தொண்டாற்றினர் என்றும் கூறுவர். தமிழ் கற்றுத் தேர்ச்சி பெறுவார் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற தமிழ்ப்பணி செய்தல் வேண்டுமென்பதை இதனால் அறியலாம்.

தமிழகம், பண்டு சேரர் சோழர் பாண்டியரென்னும் முடியுடை மூவேந்தரது ஆட்சிக்குட் பட்டதென்பது நம்மவர் நன்கறிந்தது. அவருள், பாண்டிய மன்னர் தம் நாட்டில் மூன்று சங்கங்கள் அமைத்துப் புலவர்களை ஒருங்குகூட்டித் தமிழாராய்வித்து அதனைப் போற்றி வளர்த்ததும் அறிஞர் பலரும் அறிந்ததே. அச்சங்கங்களுள், முதலாவது சங்கம் பாண்டிய நாட்டின் தென் பாகத்தில் கடல் கொள்ளப்பட்ட பகுதியிலிருந்த தென் மதுரையில் இருந்ததென்றும் அகத்தியன் முதலிய பல புலவர்கள் அச்சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தனரென்றும், இரண்டாவது சங்கம், பின்னர் அந்நாட்டின் தலைநகரமாகிய கபாடபுரத்திலிருந்ததென்றும், அகத்தியன் தொல்காப்பியன் முதலிய பல புலவர்கள் அதன்கண் இருந்து தமிழாராய்ந்தனர் என்றும் முதலிரு சங்கவரலாறுகள் கூறுகின்றன. முடத்திருமாறன் என்னும் பாண்டியன், தன் நாட்டின் தென்பாலுள்ள பகுதியைக் கடல்கொள்ள, அந்நாட்டின் வடபாலுள்ள

உத்தர மதுரையில் மூன்ரும் சங்கத்தைநிறுவினுன்என அச்சங்க வரலாறு வருகின்றது. இம்மூன்று சங்கங்களேயும் போற்றிய பாண்டிய மன்னருட் கவியரங்கேறியவர்களும் பலருளரென்று அறிகின்ரேம்.

இங்ஙனம் பெருஞ்சங்கங்கள் அமைத்துப் பலவிடங்களிலு முள்ள புலவர் பலரையும் ஒரு வழியழைத்துப் பரம்பரையாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டுவந்தஇப்பாண்டியரது தாய்மொழிப் பற்றும், இடையீடுகளால் தடைபட்டு உடையாத உள்ளமும் நம்ம ஞேர் குறிக்கொண்டு போற்றத்தக்கனவாம். இரண்டாவது சங் கம் கடல்கோளால் அழியவும் அதனை ஆதரித்த வேந்தன், தன் விடா முயற்சியால் உடனே உத்தரமதுரையில் மூன்ருவது சங்கம் அமைத்து,அப்புலவர்களை மீண்டும் ஒருவழிக்கூட்டி, முன்னர்ப் புலவர் பலர் செய்தனவாகிய தமிழணங்கின் அணிகலங்கள் பல அழியாமற் காத்ததோடு பின்னரும் அவர்கள் தம்பணியைவிடாது செய்யுமாறு செய்தானென்பதை உன்னுவோமாயின் நம் உள்ளம் கிளர்ந்தெழாது ஒடுங்கிக்கிடத்தற்கு மிடனுண்டோ? இம்மூன்ரும் சங்கத்திற்கு உறைவிடமாகிய இப்பாண்டியர் தலைநகரம் தமிழ் வளர்ச்சி கருதி இத்தகைய மாநாடுகள் நடைபெறுதற்குப்பெரிதும் பொருத்த முடைத்தாகும்.

சங்கமமைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னருட் பலர் புலவர்களைப் போற்றியதோடு தாமும் கவியரங்கேறியவராக விருந்தன ரென்பது அவருடைய தமிழார்வத்தை யறிதற்குச் சான் ருகும். பிற புரவலரிடையும் இத்தகைய பெருமக்கள் புலருளர். புகழின் பொருட்டுப் பொருள் கொடுத்து, இரந்து சென்ற புலவர்களைப் புரந்து நிற்குமளவே புரவலர் கடன் என்பதின்று. அவர் புலவராகவுமிருப்பின், அது பொன்மலர் நாற்ற முடைத் தாதல் போலுமன்ரே? அங்ஙனமாயின், இவர் புலவரது அருமை யறிந்து போற்றுவதோடு, அப்புலவருள் ஒருவராகவுமிருந்து, இவ்விருவகையாலும் தமிழ்ப்பணி புரிவர். இவ்வாற்ருல் இவர் பிற புலவரினும் போற்றற்குரியவராகின்றனர். எனவே, தமிழ்

கற்றலும், நூலியற்றலும் அன்னபிறவும் பிறர்க்கேயுரியனவென்று செல்வர் நினைத்தற் கிடமில்லை யென்க.

பாண்டியரமைத்த மூன்று சங்கங்கள் அன்றியும், பிற நாடுகளிலும் பல சங்கங்கள் இருந்தனவென்றும், மேற்கூறிய சங்ககாலத்துப் பின்னும் பற்பல சங்கங்கள் தோன்றியிருந்தன வென்றும் பொதியின் மலையின்கண் அகத்தியர் சங்கமொன் றிருந்தது என்றும், மூன்று தமிழுக்கும்தனித்தனியானசங்கங்கள் இம்மதுரையிலிருந்தனவென்றும் தமிழறிஞர் கூறுவர்.

இங்ஙனம் பலபல சங்கங்கள் ஆங்காங்கு அமைந்து தமிழ் வளர்த்தது கருதத்தக்கது. இவ்வாறே பலவிடங்களிலும் தமிழ் வளர்க்குங் கழகங்கள் அமைத்தல் வேண்டும். ஊர் தோறும் தமிழ்க் கல்வி பெறுதற்குரிய கழகங்களிருந்தாலும் உசித மாகும். 'சேமமுறவேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்றார் பாரதியாரும். முத்தமிழுக்கும் தனித் தனியாகச் சங்கங்கள் இருந்தனவென்றதனால் தமிழின் ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே சிறப்பாக ஆராயப்பட்டது விளங்கும். இவ்வாறமையப்பெற்ற இம்மதுரையில் நடைபெறும் இம்முத்தமிழ் மாநாட்டில், ஒவ்வொரு தமிழும் ஒவ்வொருநாளில் இப்போது சிறப்பாக ஆராயப்படுவது ஏற்புடையதே

மேற்கூறிய சங்கங்களில் அரசர்கள் புலவர்களை ஒருங்கு கூட்டித் தமிழாராய்வித்து நூலியற்றும்படி செய்ததுடன், நூல் தொகுப்பித்தும் செய்தன அழியாமற் பாதுகாத்தனர் என்றும், அங்ஙனம் தொகுக்கப்பெற்றன தொகை நூல்களாமென்றும் கூறு வர். இவை பண்டைப்புலவர் பாடல்களில் இறந்தனவொழிய எஞ்சியவற்றையும், பிறபுலவர் பாடல்களையும் இறவாமற் பாது காத்தற்பொருட்டுத் தொகுக்கப்பெற்ற நூல்களாம். இங்ஙனம் போற்றப்பட்டு இன்று நமக்குக் கிடைக்கப்பெற்றிருப்பன வன்றிப் பலபழந்தமிழ் நூல்களும். தனிப்பாக்களும், உரைகளும் இறந் தொழிந்தன என்று கேட்கின்றோம். இது பெரிதும் வருத்தத்தைத்

தருகின்றது. இங்ஙனம் இறந்தொழியாமற் காத்தற்கு இந்நாளிற் பல வசதிகள் உள்ளன. அன்பர்களுடைய அரிய முயற்சியால் அனேக நூல்கள் அழியாமற் காக்கப்பெற்றிருக்கின்றன. நூல்கள் பல வெளிவராமலே இறந்தொழிதல் முதலிய குறையொன்றும் நேராமல் தமிழைக்காக்கும் பணி அதிகமாகப் பெருகுதல்வேண்டும். இவ்வாற்ருல், தமிழ்நூல்கள் என்றும் பொன்ருது நின்று இன்பமூட்டுவனவாகுக.

இச்சங்கங்கள் புலவர்கள் செய்த நூல்களை அரங்கேற்றுமிடங்களாகவுமிருந்தன வென்றறிகிருேம். தொல்காப்பியம், நிலந்தரு திருவிற் பாண்டியன் மாகீர்த்தியின் அவையகத்து, அதங்கோட்டாசானுடைய தடைகட்கு விடைகூறியபின் அரங்கேற்றப்பட்டது என்பர். பின்னும் இத்தகைய வரலாறுகள் பல கேட்கப்படுகின்றன. எனவே, நூலரங்கேற்றுதலென்பது சங்ககாலத்தும் பிற்காலத்தும் நம் நாட்டில் வழக்கமாயிருந்ததென்று அறியலாம். இம்முறையிருக்குமாயின், புலமையில்லாதவரும் தம்மறிவிற்கேற்ற நூல்களை இயற்றி வெளியிட்டுப் புலவரெனத் தம்மைச் சேர்ந்தார் சிலர் புகழத்திரிதல் இயலாது. ஒருவர் செய்ததொன்றை ஒரு புலவர்குழுவைக்கொண்டு, வழுவின்மைகண்டு அங்கீகரிக்கச் செய்து, பின் உலகிடைப் பரப்பும் அம்முறை இக்காலத்தும் ஏற்றவற்றிற் கொள்ளத்தக்கது. முக்கியமாகப் புதிய சொற்களைப் படைத்தல் போன்ற துறைகளில் இதுவேண்டற்பாற்று என்று கருதுகிறேன். தமிழில் நூதனமாக எழுதப்படும் மேல்நாட்டுக் கலைகளுக்குரிய சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை ஆக்குவோருள், ஒரொற்றுமையின்றி, ஓரொருவர் ஓரொருவிதமாக ஆக்குகின்றனர். இவை ஒரு அங்கீகரிப்புச் சங்கத்தாரால் ஆராய்ந்து அங்கீகரிக்கப்படுமாயின், தமிழமைதிக் கேலாதனவாய் அவரவர்க்குத் தோன்றியவாறே ஆக்கப்படும் சொற்கள் புகுதற்கிடமிராது. பொருளுக் கியையாதனவும் புகுதரமாட்டா. பிறவழுக்களும் நீங்கும். தமிழ்மொழி அலைவில்லாத பல புதிய சொற்களால் தூய்மை கெடாது வளம்பெற்ருேங்கி நிற்கும்.

தமிழ்நாட்டுப் பிறவேந்தராகிய, சேரரும் சோழரும், இப்பாண்டியர் சங்கத்துக்கு ஆதரவு காட்டிவந்திருக்கின்றனர் என்றும், அவர்கள் இச்சங்கத்துச் சான்ருேர்களைப் பெரிதும் போற்றி, இவர்களைக்கொண்டு தமிழ்ப்பணிகள் செய்வித்திருக்கின்றனர் என்றும் தமிழறிஞர் கூறுவர். அங்ஙனமே, பிற குறுநில மன்னரும், அவர்போன்ற பிறரும், இச்சங்கத்துச் சான்ருேர்களைத் தம் உயிரினும் சிறக்க நேசித்து, அவர்கள் பொருட்குறைவால் இடர்ப்படாமல் ஆதரித்தனர் என்பர். ஒருகாலத்தில் பாண்டிய நாட்டில் பஞ்சம் தோன்ற, அக்காலம் முழுதும் இச்சங்கப்புலவர்களை ஆலஞ்சேரி அயிந்தன் என்பானெருவன் ஆதரித்தான் என்றும் அறிகின்ருேம். இவ்வாறு பாண்டியர் சங்கம் எல்லாராலும் ஆதரிக்கப்பெற்றுத் தமிழக முழுமைக்கும் பொதுமையில் நின்ற ஒரு பெருங்கழகமாம் என்று அறிஞர் துணிகின்றனர். இவ்வாற்ருல் தமிழ் வளர்ச்சியில் தமிழகத்தினரிடை நிலவிய ஒற்றுமையை உணரலாம். இங்குத் தமிழன்பர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

மூன்ருஞ்சங்கமிருந்து தமிழ் வளர்த்த இம்மதுரையம்பதியில் என்குலத்தவரும், உறவினரும், இருபெருஞ்செல்வமும் வாய்ந்த ஒரு பெருங்குரிசிலுமான உக்கிரபாண்டியன் என்னும் இயற்பெயர்பூண்ட, பொ. பாண்டித்துரைத் தேவரவர்களால் நிறுவப்பெற்றுப் பலவாண்டுகளாகப் பலதுறைகளிலும் தமிழ்வளர்த்து வரும் சங்கத்தைப் பலரும் அறிவர். தமிழ்ச் சுவையறிவார் தொகை அருகவும், அம்மொழியில் இன்னதுள்ளது என்று அறிந்தார் சிலர் எடுத்துரைப்பினும் கேட்பதற்கு மனமிலராய்த் தமிழையும் தமிழ் கற்போரையும் கண்டாற் சிறுநோக்கு நோக்கும் செருக்கினர் தொகை பெருகவும், தமிழணங்கு பெரும்பாலோராற் பேணற்பாடொழிந்து குன்றத்தலைப்பட்ட நிலையில் இச்சங்கம் தோன்றியதென்று பெரியோர் கூறுவர். இத்தன்மையான காலத்தில், தண்டமிழ்வாணரைக் கௌரவித்து அவர்களை ஆதரித்துத் தமிழின் உயர்நிலைவிளங்க அதனை வளர்த்துத் தமிழ்க் கல்வியைப்

பலரிடைப் பரப்புதற்கு இச்சங்கம் நிறுவப்பெற்றது. அதுமுதல் இது செய்துவந்திருக்கும் அரும்பெரும் பணிகள் போற்றற்குரியனவாம். இச்சங்கத்தின் மூலம், தமிழ்க்கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றூர் பலராவர். சங்கத்திலேயே தங்கிப் போசனைக்காகப் பொருளும் தரப்பெற்றுத் தமிழ் பயின்றும், பிறவாறு அதனைப் பயின்றும் இச்சங்கத்தார் நடத்தும் பரீட்சைகளில் தேர்ச்சிபெற்று விசேடமான யோக்கியதையை யடைந்த பண்டிதர் பலர் தமிழ்நாடு முழுதும் ஆங்காங்கிருந்துகொண்டு, தம்மாலியன்றவகையில் தமிழ்த்தொண்டாற்றிவருகின்றனர். சிறந்த தமிழ்ப்புலவர்களை இது ஆதரித்து வந்திருக்கிறது. இதிலிருந்து வெளிவந்த ஆராய்ச்சியுரைகளும், அன்ன பிறவும் தமிழன்பரை மகிழ்வித்துள்ளன. இவை போன்ற தமிழ் வளர்ச்சிக்குரிய பல துறைகளிலும் இச்சங்கம் ஈடுபட்டுவருகின்றது. அவையெல்லாம் யான் இங்கு விரித்துரைக்க வேண்டுவனவல்ல. தமிழன்பர்கள் அதற்கு ஆதரவுகாட்டவேண்டுமென்பதே யான் சொல்லக் கருதியதாகும்.

சென்ற ஆண்டில் இந்நகரின்கண் ''தமிழிலக்கிய மாநாடு'' சிறப்பாக நடைபெற்றது. இவ்வாண்டில் இம்மாநாடு மிகவும் சிறப்பாக நடத்தப்படுகின்றது. இவை தமிழ் வளர்ச்சக்கு வேண்டற்பாலனவே. இவை தமிழன்பர்களுக்கு உவகையூட்டுமென்பதில் ஐயமில்லை.

முற்கூறிய சங்கப் புலவர்கள் எல்லா நற்குணங்களும் நிறைந்து, சான்றோர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்றனர். அவர்கள் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தது பொருளீட்டல் கருதியன்று. வள்ளல்களாயுள்ளவர்கள், இவர்கள் பொருட்குறையால் மெலியாது கவனித்துக்கொண்டனர். இவருள் சீவனோபாயமாகப் பிறதொழிலை மேற்கொண்டவரும் உளர். இப்புலவர்கள், தந்நலம் கருதாது தமிழ்ப் பணியில் ஈடுபட்டு வாழ்க்கையை நடத்தியிருந்தனர். இங்ஙனம் வாழ்ந்து, உரைகளும், செய்யுள்களும் பலவியற்றினர். தம் மதிநுட்பத்தாலும் நூலறிவாலும் புரவலர்க

ளுக்குச் சூழ்ச்சித் துணைவராயும், அவர் வினைமுடிப்பவராயும், ஆருயிர்த் தோழராயுமிருந்து அப்போதப்போது அவர்கட்கு இனிய அறிவுரைகளை வழங்கி மகிழ்வித்துவந்தனர். பொருள்களின் இயற்கையைத் தம்முடைய கூர்த்த மதியால் உற்றுநோக்கி யுணர்ந்து, நூல்கள் செய்தனர். தம் குழுவிடை ஒருவர்க்கொரு வர் இகலில்லாது வாழ்ந்தனர். இங்ஙனமே, பலவகையிலும் மேம்பட்டவர்கள் என்று இவர்கள் கூறப்படுகின்றனர். இத் தகைய உயர்ந்த நிலையில் நின்ற சிறந்த புலவர்களைத் தன் பணி செய்யும் மக்களாகப் பெற்ற தமிழ்மொழி எத்துணை வளம் படைத் திருக்குமென அறிஞர் உன்னி யுணரலாம்.

இன்றும் இத்தன்மை வாய்ந்த புலவர்களின் தொகை பெரு குதல்வேண்டும். பொருள்நலம் படைத்தோரும், அரசாங்கத்தா ரும், பிறரும் அப்புலவர்களைப் போற்றுதல் வேண்டும். தமிழ் கற்றோர் நிலையைப் பலவழிகளிலும் உயர்த்தி ஆதரித்தலே அம் மொழியைக் கற்போர் தொகை பெருகுவதற்குச் சிறந்த துணை யாகும்.

புலவர்க்கும் புரவலர்க்குமிடையே ஒற்றுமை யுணர்ச்சி யுண்டாதல்வேண்டும். அப்பொழுதுதான் மொழி நன்கு வளரும். களவழி நாற்பது என்னும் நூலை இயற்றித் தம்மை மிகவும் நேசித்து ஆதரித்த சேரமான் கணைக்காலிரும்பொறை என்னும் அரசனைச் சோழன் செங்கணானுடைய சிறையிலிருந்து விடுவித் தார், பொய்கையார் என்னும் ஒரு புலவர் என்றும், மோசிகீரனார் என்னும் புலவர், மிகவும் புனிதமுடையதாகக் கருதப்படுவதான முரசு கட்டிலின்மேல் அறியாது. வழி நடந்துவந்த களைப்பால் உறங்கியபோது, அவரை அறிந்து அப்பிழையைப் பொறுத்து, அவர் எழுமளவும் களைப்புத் தீரக் கவரிகொண்டு வீசிநின்றான், சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னும் ஒரு வேந்தன் என்றும், அதிகமான் நெடுமானஞ்சி என்னும் வள்ளல் தான் அரிதிற்பெற்ற அமிழ்தாய நெல்லிக்கனியை ஔவையிடம்

கொடுத்து மகிழ்ந்தான் என்றும் தமிழ் கற்ரோர் கூறுவர். கோப் பெருஞ் சோழன் பிசிராந்தையாரிவரிடையிருந்த நட்பின்திறத்தை நாம் கேட்டிருக்கின்ரோம். இங்ஙனம் புலவரும் புரவலரும் ஒருவ ருக்கொருவர் அன்பும் மதிப்புங்கொண்டு பண்டு வாழ்ந்தனர் என் பர். இந்நிலை தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணையாகுமன்ரோ?

இப்புலவர்கள், ஒரே குலத்தினரல்லர்; ஒரே சமயத்தின ரல்லர்; ஒரே பாலினரல்லர்; மற்றும் பலவகையாலும் பலவேறு வகையிற்பட்டவர் என்பர். இங்ஙனம் வேறுபட்டாராயினும் ஒருங்குகூடித் தமிழ்த்தொண்டு புரிவதில் வேறுபடாது நின்றது நோக்கத்தக்கது. வருணம் முதலியவற்ருல் வேறுபட்டவராயி னும் தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட காரணத்தால் ஒன்று பட்டவராவரன்ரோ? தமிழ் பேசும் மக்கள் எவ்வெவ்வாறு வேறு பட்டுநிற்பினும், அம்மொழியிடத்து அனைவர்க்கும் உரிமையுண் டன்ரோ? மக்களிடையுள்ள பிறவேற்றுமைகள் அவர்களுக்குப் பொதுவாய் உரியது ஒன்றன் வளர்ச்சிக்குத் தடையாமாயின் அம் மக்களும் அவர் உரிமையும் குன்றுதல் கூறல்வேண்டாததே. எங் கும்வேறுபாடுகள் எவ்விதமாகவாயினும் இருத்தலியல்பு. அவ் வேறுபாடுகளால் ஒன்றிய நிலையை மக்கள் மறத்தலாகாதன்ரோ? ஆகவே, இங்ஙனம் வேறுபட்ட மக்கள் யாவரும் தமிழ் வளர்ச்சி யில் ஒன்றுபட்டுநின்றது போற்றத்தகும். இப்புலவர்களை யாதரித் தும். நூல்களையும் உரைகளையும் இயற்றுவித்தும், பலவாறு தமிழுக்கு உழைத்துவந்த புரவலர்களும் அங்ஙனமே குலம் முத லியவற்ருல் வேறுபட்டனராயினும், தமிழ்ப் பணியில் ஒன்றுபட்டு நின்றவராதலும் குறிக்கத்தக்கது. பிற்காலத்திலும், இவ்வாறே யாவரும் தமிழ்த் தொண்டில் ஈடுபட்டுள்ளனர்.

சங்க காலத்துக்குப்பின், பல பேரரசரும், சிற்றரசரும், மடாதிபதிகளும், திருவின்மிக்க பெருமக்கள் பிறரும், பலவேறு புலவர்களும் இத்தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டவராவர். சங்கத்துச் சான்ரோரிடத்தும், அவரை ஆதரித்துத் தண்டமிழ் புரந்தோரிடத்

தும்காணப்பட்ட அரும்பெரும் பண்புகள் பல இவர்களிடத்தும் காணப்படும். தமிழகமுழுதும் தன்புகழ்பரப்பிக் கவிச்சக்கரவர்த்தியென்று கொண்டாடப்படும் மகாகவியாகிய கம்பனும், ஒட்டக்கூத்தன் முதலிய பல உயர்பெரும் புலவர்களும் தம்முன்னோர் நூல்களெல்லாம் ஆராய்ந்துணர்ந்த நூலறிவாலும், தம் மதி நுட்பத்தாலும், புதியது புனையும் ஆற்றலாலும் பெரியவும் சிறியவுமான பல நூல்களும் உரைகளும் இயற்றித் தமிழை வளம்படுத்திருப்பது பற்றி விரித்துரைத்தல் வேண்டியதின்று. வெண்ணெய்ச் சடையன் போன்ற வள்ளல்களுடைய தமிழார்வமும் தமிழ்ப்பணிகளும் நாம் மறக்கற்பாலன வல்ல. பலவழிகளிலும் தமிழ் நலம் கருதிப் பாடுபட்டுவந்த செல்வச் செழுந்தகையார் மாலையில் திகழ்ந்து, தமிழ்ப்பணி புரிவதில் பேரார்வம்கொண்டு இயன்றமட்டில் கடமையைச்செய்துவந்தோர் பரம்பரையில் யான் தோன்றியது எனக்குப்பெருவகை யளிப்பதாகின்றது. அதனை ஒரு பெருஞ் சிறப்பாக யான் கருதுகின்றேன். அவ்வுரிமையே இம் மாநாட்டை யான் திறந்துவைக்கும் வேலையை ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டலாயிற்று.

மேலே உரைத்தவாறு முற்காலத்து வாழ்ந்த தமிழ்ப் பெருமக்களுடைய ஆதரவைப்பெற்று இவ்வியற்றமிழ் அதன் எல்லா அம்சங்களிலும் சிறந்து வளர்ந்து திகழ்ந்தது. இனி, அதுபற்றிச் சிறிது ஆராய்வோம்.

மிக நீண்டகாலத்திற்கு முன்னரே நம்முன்னோர், எழுத்துக்களின் ஒலிவடிவங்களை அறிதற்குரிய வரிவடிவங்களை யமைத்துக்கொண்டனர் எனல் வேண்டும். எழுத்து என்னும் பெயர், எழுதப்படுதல் பற்றி வந்தது என்பர். மற்றும், முதலில் சித்திரவெழுத்துக்கள் தோன்றினவென்றும், அவற்றினின்று பின் பல வேறு வரிவடிவங்கள் தோன்றலாயின வென்றும். அச்சித்திரவெழுத்துக்கள் பழங்காலத்தில் இந்நாட்டிலிருந்தன வென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அன்றியும், நடுகல்லில் வீரம் மிக்கவனொருவனுடைய பெயரும் பெருமையும் எழுதும் வழக்கம்,

நம்நாட்டில் மிகவும் பழமைவாய்ந்ததென்றும் கூறுவர். எவ்வளவு காலத்திற்கு முன்னரே நம்முன்னேரால் இம்மொழி இந்நிலையடைந்திருக்கின்றது! எழுதும் அளவிற்கு வாராதுநின்ற மொழிகளும் உளவன்ரு? மற்றும், எழுத்துக்களின் ஒலிவடிவினுடைய பல அம்சங்களும் ஆராய்ந்துரைக்கப்பட்டிருத்தலும், முற்காலத்தில் இயற்றமிழின் முதற்பகுதியான எழுத்தின் நிலையை நாமறிதற்குச் சிறந்த சான்ருகும். இக்காலத்தும், தமிழ் எழுத்துக்கள் பற்றிய ஆராய்ச்சி தமிழன்பரது கவனத்தைப் பற்றியிருத்தல் குறிக்கத்தக்கதாகும்.

இரண்டாவது பகுதியாகிய சொல்லிலக்கணமும் நன்கு வளர்ச்சிபெற்றது. சொற்கள் வழுக்களைந்து ஆக்கப்பட்டன. சொற்கள் ஆக்கப்படும் முறைகளும் வகுக்கப்பெற்றுள்ளன. புதிய சொற்களும் சொற்ருெடர்களும் கண்டமைக்கப்பட்டன. அங்ஙனம் சொற்ருெடரமைத்ததுபற்றி அச்சொற்ருெடராலேயே பெயர் பெற்ற புலவரும் உளர் என்பர்.

மற்றும், நம்முன்னேர், ஆரியத்திலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்களை வடசொற்கள் என்றும், பிறநிலத்திலிருந்து வந்து வழங்குவனவற்றைத் திசைச்சொற்கள் என்றும் வகுத்து, இலக்கணமுரைத்திருக்கின்றனர் என்றறிகின்ருேம். இங்ஙனம் பிறமொழிச் சொற்கள் தமிழிற் புகுதலை அமைத்துக்கொண்டது, அதனுல் தமிழ் மொழிக்கு ஆக்கமுண்டாதல் கருதியாமென்றுணரலாம். தமிழில் வந்து வழங்குமுறைமைகாட்டி இலக்கணம் வகுத்திருப்பது, தமிழ்ப்பண்பழியாமற் பிறமொழிச் சொற்களை, அம்மொழியிற்கொண்டு, அதனைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கத்தைக் காட்டுகின்றது. இவையெல்லாம் முன்னர் வந்த சொற்களை அமைத்தவாறன்றிப் பின்னர் வருதற்குரியவற்றைத் தழுவுதற்கல்ல வெனின், அதனை அறிஞர் பொருத்தமுடைத்தாகக் கருதாரென்றெண்ணுகிறேன். இதனுல், வேண்டுமிடத்து நாம் பிறமொழிச் சொற்களைக்கொண்டு நம் மொழிப் பண்பு

கெடாதமைத்து, அதனை வளம்படுத்திக்கொள்ளலாமென்றும், அதனல் அம்மொழிக்குக் குறைவில்லையென்றும் உணரலாம்.

இங்ஙனமே, உயரிய கருத்துக்கள் வேறிடத்துளவாயின், அவற்றை நம் மொழியிடைக்கொணர்தலும் அதனை வளம்படுத்து தற்குத் துணையாகும். இந்நெறியில், பிறமொழிகளிடத்திலிருந்து நம் மொழிபெற்ற உயர் பொருள்கள் பலவென்பர். பிற மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவாகிய நூல்கள் நம்மொழியிற் பலவுள்ளன. அவற்ருல் நம்மொழி எத்துணை ஆக்கமடைந்துள்ளது! தமிழில் தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்ப்பு என நால்வகை நூல் யாப்புக்கள் (நூல்களை ஆக்கும் நெறி) வகுக்கப்பட்டிருப்பதை அறிகிருேம். இவற்றுள், மொழி பெயர்ப்பு ஒன்ருக முன்னேர் வகுத்திருப்பது, அவருடைய மொழி வளர்க்கும் நோக்கத்தை நன்கு விளக்குகின்றது. ஒரு மொழி பிறமொழிகளின் உதவியால் வளம் பெறுதலை விரும்பாதொழியின், அது பின்னணியில் நின்ருெழியும் என்பதற்கையமில்லை. அதனல், நாம் பிறமொழிகளைக்கொண்டு நம்மொழிக்கு வரக்கூடிய ஆக்கத்தைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும். பிறமொழிகளிற் காணப்படும் அரியபெரிய நூற்பொருள்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும். இப்பணி மிகுதியாகப் பெருகுதல் வேண்டும்.

இன்னும், மிகவும் பழமையான காலத்திலேயே, நம் தமிழ் மொழி, அரசியலும், அமைச்சியலும், இசையும், நாடகமும், கணிதமும், நியாயமும், சிற்பமும், மருத்துவமும், சோதிடமும் முதலான பலவேறு வகையான துறைகளிலும் பெருகிய நூல்களையுடையதாகத் திகழ்ந்ததென்பர். கலை தழுவிய நூல்கள் பல இந்நாளிற் கிடைத்திலவேனும், அந்நாளில் இம்மொழி ஒராற்ருலும் குறைவின்றி நின்றதென்று கேட்கின்ருேம். ஆனல், இந்நாளில் காலத்திற்கேற்ற கலை நூல்கள் இம்மொழியிற் பெருகவில்லையென்பது மெய்யே. அக்குறை, நமது குறையாவதல்லது,

நம் மொழியின் குறையாகாது. ஆதலின், அக்குறை நீக்கவேண்டுவது நமது கடமையாகும். அக்குறை நோக்கி அதனை அறவே புறக்கணித்துவிடுவது அறிவுடைமைக் கேலாது. தமிழுக்கு வரும் தாழ்வு தமிழர்க்கு வரும் தாழ்வே. ஆதலால், பிறமொழிகளிலுள்ள காலத்தாற் பெருகிய கலைச் செல்வங்களை யெல்லாம் தமிழில் மொழிபெயர்த் தமைத்தல் வேண்டும். "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும் — கலைச் — செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" எனத் தமிழன்னை தன்மக்களை நோக்கிப் பணிப்பதாகப் பாரதியார் பாடியிருப்பது இங்கு நினைக் கத்தகும். இன்னும் இது குறித்து விரித்துரை வழங்கல் வேண்டு வதின்றாம்.

இயற்றமிழிலக்கணங்களுள் மூன்றாவதுபொருளிலக்கணம். மொழியை ஆராய்ந்ததோடு, அம்மொழி வழங்கும் பொருளையும் ஆராய்ந்து, அதனை அகம் புறம் என இரண்டாக வகுத்து, இன்ப மும், அறமும், பொருளும், பிறவுமாகிய எல்லாப்பொருளும் அடங்க விரித்து, இலக்கணம் உரைத்து, வளம்பெற வைத்திருக் கும் இப்பொருளிலக்கண முறை, இத்தமிழ் மொழியிலேயே காணப்படுவதென்பர். இன்னோரன்ன இலக்கணச் சிறப்புடை மையால், "இப்பசுந் தமிழ் ஏனை-மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்-எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ண வும்படுமோ" என்ற ஆன்றோர் வாக்குச் சாலவும் பொருத்த முடைத்தாகின்றது. தன் மக்களது ஆராய்ச்சி வன்மையால், இத் தகைய சிறப்பியல்களைப் பெற்று இம் மொழி திகழ்கின்றது. இப் பொருட் பகுதிபற்றிய இலக்கணங்களும், இலக்கியங்களும் பெரு கியுள்ளன. இவ்விலக்கியங்கள் கற்பனைக் களஞ்சியங்கள் என் பர். கற்பனையாற் புதிய நூல்களியற்றுதற்கு இவை வழிகாட்டி யாகவுள்ளன. புதிய நூல்களியற்றுதல் நமக்குப் புதிய தன்று. புதி தாகப் புனையப்படுவது, "விருந்து" என்று தொல்காப்பியம் முத லியவற்றுட் சொல்லப்பட்டுள்ளது என்பர்.

இவ்வாறே, யாப்பிலக்கணமும் பிறமொழிகளிலும், தமிழிற்

சிறந்த முறையில் வளர்ந்து வந்திருக்கின்றது என்றும், பற்பல புலவர்கள் பற்பல செய்யுள் நெறிகளை ஆராய்ந்துகண்டு, நூல்கள் இயற்றிச் செய்யுளிலக்கணத்தை வளம்படுத்தியிருக்கின்றனர் என்றும், கூறுவர். இவ்விலக்கணங்களைக் கொண்டெழுந்த செய்யுட்களும் மிகப்பலவாம். தமிழ்ச் செய்யுட்கள். செவிக்கினிய இன்னோசையுடையனவாய் உள்ளங்கவர்தல் கண்கூடு.

இங்கு, நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. தமிழில் வசன நூல்கள் மிகவும் குறைவாக வுள்ளன ஆதலால், அவை பெருகுவதற்கு முயலவேண்டுவது முறையே. ஆனல், அதுகாரணமாகச் செல்யுள் நூல்கள் பெருக்குதலை அறவே புறக்கணித்துவிடுதல் முறையாகாது. ஒன்று குறைவுற்றிருந்தால் அதனை நிறைவுறச்செய்வதே நியாயமாவதல்லது, அதன் பொருட்டுநிறைவுற்றிருந்ததனைக் குறைவுற விடுவது நியாயமாகுமோ? ஏதேனும் மாறுதல் வேண்டினல், ஒரு கோடியிலிருந்து அதனை அறவே விட்டு, மற்றொரு கோடியைப் பற்றுதல் மக்களியல்பு. அவ்வியல் பாற்செய்யுட்கள் புறக்கணிக்கப் படுவனவாயின், செய்யுள் செய்யும் ஆற்றலை நம் தமிழர் இழந்துவிடுவர். இவ்வாற்றல் வேண்டும் போது ஒருவர் தம்மிஷ்டம்போல் உண்டாக்கிக் கொள்ளப்படுவதன்று. அது அடிப்பட்டவாசனையாலுண்டாவது. ஆதலால், அதன் பயிற்சியை அகற்றிவிடுதலாகாது. அரும்பெரும் பொருள்களைச் சுருங்கிய முறையில் உள்ளத்தெழுதிவைத்துக் கொள்ளுதற்கேற்ப, இன்னோசையுடைய செய்யுட்களில் அமைத்துவைக்கும் நம் முன்னோர் நெறி நம்மாற் போற்றற்குரியதே. ஆதலால், செய்யுள் பெருகுமாறும் அதற்கு ஆதரவு காட்டுதல் வேண்டும்.

உரைநடை நமக்குப் புதிதன்று. தொன்றுதொட்டு வரும் பலவேறு வகையான நூலுரைகள், இவ்வுரைநடை யுண்மை காட்டும். உரையும் பாடலும் கலந்துவரும் நூல்கள் பண்டேயுள்ளன வென்பர். பாட்டுச் சிலவந்து உரை பெருகியனவும், பாவே யில்லாது உரையாக வந்தனவும், பொருளொடு புணராப் பொய்ம்

டொழி யுள்ளனவும், பொருளொடு புணர்ந்த நகைமொழி யுள்ளன வும்என, நால்வகை உரைநடை யுண்டென்றும், சிறுகுரீஇ யுரை என்பது பொய்ம்மொழியுள்ள பழைமையானதொரு உரை நூல் என்றும், மற்றும் அத்தகைய கதை தழுவிய உரை நூல்கள் பழங் காலத்தில் உளவாதல் வேண்டும் என்றும் தமிழறிஞர் கூறுவர். இவற்ருல், உரைநடையின் பழைமையை உணரலாம்.

ஆயினும், உரை நடை நூல்கள் செய்யுள் நூல்கள் போல மிகுதியாகத் தமிழில் பெருகவில்லை. இக்காலத்தில் உரைநடை நூல்களே மிகுதியாக வேண்டப்படுகின்றன. அவை மொழி வளர்ச்சிக்கு மிகவும் அவசியமென உணரப்படுகின்றன. பொருள் களை எளிதில் உணர்தற்கும், உணர்ந்ததை அங்ஙனமே எளிதில் வெளியிடுவதற்கும் தாய்மொழிபோற் பிறமொழிகள் துணையாகா. அத்தாய்மொழியுள்ளும், உரைநடையே யாவர்க்கும் நன்கு பயன்படுவதாகும். ஆதலால் யாவரும் தமிழொடு பழகித் தமி ழால் தம்மறிவை வளர்த்துக்கொள்ளுதற்கேற்ப, யாவரும் உண ரத்தக்கமுறையில், எளியநடையில்எழுதப்படும்உரைநடை நூல்கள் பல துறைகளிலும் பெருகுதல்வேண்டும். ஆங்கில மொழியின் உரைநூற் பெருக்கம் அறிஞர் நோக்கத்தக்கது.

இறுதியாகவுள்ள அணியிலக்கணமும், பலவகையான அணிகளும் வகுத்துரைக்கப்பெற்று, மற்றை யிலக்கணங்கள் போலப் பெருகியுள்ளது.

இவ்வியற்றமிழிலக்கணங்கள் ஐந்தனையும் விரிக்கும் நூல் களும், சிலவற்றையே சிறப்பாக விரிக்கும் நூல்களுமாக, இலக் கண நூல்கள் பெருகியுள்ளனவென்பர். இவற்ருேடு பல இலக்கி யங்களும் கொண்டு, பல பகுதிகளிலும் விரிந்து விளங்குமாறு பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் பாடுபட்டிருக்கின்றனரென்பது, மேலுரைத்தவற்ருல் அறியப்படும். அத்தமிழ் மக்களே யன்றியும்,

அந்நிய நாட்டினருள்ளும் சிலர் இத்தமிழ் மொழிக்குப் பெரும்பணி செய்திருக்கின்றனர். இத்தாலி நாட்டினரான வீரமாமுனிவர் (Constantine Joseph Beschi) தமிழிலக்கணங்களும் இலக்கியங்களும் இயற்றியிருப்பது தமிழறிஞர் அறிந்ததாகும். நம் தமிழ் மொழியிடத்து நன்மதிப்பும் நல்லார்வமுங்கொண்டு, வெளிநாட்டோர் இதை வணக்கம் செய்யும்வகையில், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் துதவியது போன்ற அரிய பணிகளைச் செய்தும், பெரிய மதிப்புரை யெழுதி இம்மொழியைச் சிறப்பித்தும் சென்ற மேனுட்டறிஞராகிய போப்பையரை நாம் மறத்தலியலாது. ''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்பது பாரதியார் கூற்று. அங்ஙனம் நம்மொழியின் மேம்பாடு பலவும் வெளிநாட்டோர் அறிந்து அதனை வணக்கம் செய்யுமாறு செய்வதும் நமது கடமைகளுள் ஒன்றுமென்பது நாம் இங்கு உணரத்தகும்.

இங்ஙனம் செழித்தோங்கி, நமது செல்வமாய்வந்த தமிழின் முன்னிருந்த பல அம்சங்களையும் போற்றி அழியாமற் பேணுவதோடு காலப்போக்கை அனுசரித்து, இன்னும் முன்னேற்றமடைந்து, முன்னணியில் அது நிற்குமாறு செய்யும் பொறுப்பு நம்மிடத்துள்ளது. நம்மொழியின் ஆக்கமே நமது ஆக்கமாகும். ஆதலால், தமிழர் யாவரும், தம்மொழியைப் போற்றுவது தமது கடமையாகக் கொள்ளல்வேண்டும்.

இவ்வியற்றமிழ் வளர்ச்சிக்குரிய பலவற்றையும் நாடுதற் பொருட்டே நாம் இங்குக்கூடியிருக்கிறோம். இத்தலத்தெழுந்தருளியுள்ள கண்ணுதற்பெருங்கடவுளும்கழகமோடமர்ந்துதமிழாராய்ந்ததாக ஆன்றோர் கூறுவர். அப்பெருமான் நமக்குத் துணையாய் நிற்பது நிச்சயம் என்று எண்ணுகின்றேன். இவ்வியற்றமிழ், யாவரும் மதிக்கும் வகையில் உன்னத நிலையை யடைந்து, மக்களது உள்

ளத்திருளை யொழித்தற்குரிய மொழிகளுள்ளே முதன்மைத்தாக நிற்குமாறு முயல்வதற்கானவற்றுள் யான் கருதிய ஒரு சில இவ்வுரையில் மேலே யுரைக்கப்பட்டன. இன்னும் இவைபோன்ற நெறிகள் பலவும் இங்குவந்துள்ள அறிஞர் பலரால் இனி ஆராய்ந்துரைக்கப்படுமாறு, மிக்க உவகையோடு இப்பொழுது இம்மாநாட்டைத் திறந்து வைக்கின்றேன்.

மதுரைத்தமிழ்ச்சங்கத் தலைவர், இராமநாதபுர மகாராசா
சண்முக ராசேசுவரசேதுபதி அவர்கள் பிரிவு குறித்த

# இரங்கற் பாக்கள்

சங்கத் தமிழ்மதுரைத் தமிழ்ச்சங்கக் காவலனே
எங்கள் தமிழகத்தார் ஏத்தும் பெருந்தகையே!
இங்கிதவான் பாலவனத் தெம்மான் பாண்டித்துரையின்
சங்கத் தலைமைகொண்ட சண்முக ராசேசுவரனே!

தெய்வீகத் தனுக்கோடித் தெரிசனையே செய்தபயன்
உய்வதனைத் தந்தருளும் உயர்சேது பதியானே
பொய்யான இவ்வுலகில் புகழுடம்பே பெற்றதனுல்
மெய்யான பெரியவர்வாழ் மேலுலகம் சென்றனையோ!

நாடெல்லாம் போற்றவரும் இராமநா தன்முகவை
வீடெல்லாம் உள்ளமக்கள் வெருண்டு புலம்பியழ
ஏடெல்லாம் கொண்டாடும் எழிற்சேது பதியானே
ஈடொன்றும் இல்லாத இசைமரபு காத்தவனே!

சண்முக ராசேஸ்வரனே சட்டமன்றம் பன்முறையும்
எண்ணியாங் கேறியவ! எளியார்க் கினியவனே
புண்ணியனே நல்லமைச்ச! புகழ்சான்ற சீர்த்தியனே
மண்ணுலகோர் நின்பணியை மறப்பரோ மறவாரே!

தேவரே யானாலும் சென்மம் எடுத்தவரில்
மூவரே யானாலும் முடிவொருநாள் உண்டாமால்
சாவரோ நின்போல்வார் தமிழுள்ள காலமெலாம்
ஆவரே அமரரென அகந்தோறும் வாழ்வாரே!

அவ்வாழ்வு பெற்றுவந்த ஐயா, அருமையுடன்
தெவ்வருமே கொண்டாடும் சீர்சால் குணம்படைத்தாய்
ஒவ்வா துலகிடையே உத்தமர் பிரிவுமந்தோ
எவ்வா றிறையுளமே இயற்றிடுமோ ஏற்றிடுமோ!

வருபவரும் செல்பவரும் வழக்கமாய்க் கொண்டுலகந்
தருபவரும் எண்ணிலரே சத்திய சோதனையர்
அருளாளர் காந்தி யண்ணலார் போதனையை
இருள்தவிரா உளங்களுமே ஏற்றுய்யுங் காலமுண்டோ.

காலமெலாம் மக்கள் கவலை யொழிந்திடவே
சீலமுடன் சிந்தனையும் செயலும் மிகக்கொண்டு
ஞாலமும் ஐம்பத்தெட்டாய் நவிலாண்டு தான்வாழ்ந்தே
ஆலமருங் கண்டன் அடிசார்ந்தாய் வாழியவே.

—தமிழ்ச் சங்கத்தார்.

ஆக்கியோர்:— அன்பு கருணையானந்தா.

——○——